Registered as a NewsPaper in Ceylon

விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா
தினப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 18-00
ஆறு மாதம் — ரூ. 34-00
ஒரு வருடம் ரூ. 66-00

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 37
தேசிய தினசரி

ஈழநாடு சந்தா
வாரப் பதிப்பு
மூன்று மாதம் — ரூ. 4-00
ஆறு மாதம் — ரூ. 7-50
ஒரு வருடம் — ரூ. 14-00
முற் பணம் கட்ட வேண்டும்
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் பங்குனி 6 முஹர்ரம் 10 வியாழக்கிழமை [19-3-70]

# வட பகுதியில் இன்று தேசிய இளைஞர் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

வட மாகாணத்தில் தேசிய இளைஞர்சேவையை ஆரம்பித்து வைப்பதற்காக ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இன்று காலை வருகிறார். பலாலி விமான நிலையத்தை இன்று காலை 8-30 மணிக்கு வந்தடையும்போது, யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர், ஆட்சிமன்ற உறுப்பினர்கள் மந்திரியை வரவேற்பார்கள்.

மந்திரி கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள் வருமாறு:

காலை 8-45 மணி காங்கேசன்துறை அரசினர்விருந்தினர்விடுதியில் காலை உணவு 10 மணி: பளையில் தேசிய இளைஞர் சேவையை ஆரம்பித்துவைத்தல், நண்பகல் 1 மணி: யாழ்ப்பாண எம். பி திரு. ஜி ஜி பொன்னம்பலம் பகல் போசன விருந்தளிப்பார்.

மாலை 4 மணிக்கு குருநகரில் தேசிய இளைஞர் சேவையை அங்குரார்பணம் செய்துவைப்பார். மாலை 6-15 மணிக்கு இராமநாதன் இசைக்கல்லூரியில் மாணவர்களுக்குப் பட்டமளித்தல், இரவு 8 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி இராப் போசனம், 20ந் தேதி காலை 7 மணிக்கு விசேஷ விமானத்தில் கொழும்பு திரும்புவார்.

## உதவி அரசாங்க அதிபர் செய்தி

மாவிட்டபுரம், வியாழன்

"நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீவிரமாகத் தீர்க்க இளைஞர் பேரவையே இலகுவானதும் சுயமரியாதையுமான வழி" என்று யாழ். மாவட்டத் தேசிய இளைஞர் சேவைப் பேரவையின் பொறுப்பாளரான யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இன்று ஆரம்பிக்கப்படும் இளைஞர் பேரவை பற்றிப் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

வாலிபர் பேரவை இன்று யாழ்ப்பாணத்தில் அமோக ஆதரவைப் பெற்றுள்ளது. அக்கறை காட்டாத வாலிபர்கள் தற்போது இத்திட்டத்தில் சேர முன்வருகின்றனர். தேசத் தொண்டில் ஈடுபடச் சம்மதிக்கும் வாலிபர்கள் தங்கள் தங்கள் கல்வித் தராதரத்திற்குக் தக்கபடி விசேஷ தொழில்நுட்பப் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவதோடு, பிற தேசங்களுக்கு அனுப்பப்பட்டு, உயர்தரத் தொழில் நுட்பக் கல்வி கற்பதற்கு இத்திட்டம் வசதியளிக்குமென்பதை இளைஞர்கள் உணர்ந்துவிட்டனர்.

# பாலைதீவு விபத்தில் உதவி; மாநகரசபையில் சர்ச்சை

## 5 நிமிடம் கூட்டம் ஒத்திவைப்பு நன்றித் தீர்மானம் நிறைவேறியது

யாழ்ப்பாணம், வியா.

பாலைதீவுப் படகு விபத்தில் சிக்கி மாண்டவர்களின் சடலங்களை மீட்பதில் உதவி செய்தவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையொன்றை முன்னறிவித்தபடி மாநகரசபை உறுப்பினர் திரு. ஏ. போல்ராஜா நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற மாநகரசபையின் கூட்டத்தில் பிரேரிக்க முன்வந்தபோது சில அங்கத்தவர்கள் எழுந்து நின்று அப்பிரேரணையின் வாசகம் பற்றிக் கண்டனம் தெரிவித்தனர். மேயர் சொல்லியும் அந்த அங்கத்தவர்கள் ஆசனத்தில் அமராமல் உரத்த குரலில் பேசத் தொடங்கியதால் சபை கூட்டத்தை மேயர் ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

திரு. போல்ராஜா தமது பிரேரணையை அதிலுள்ளபடி வாசிக்க வேண்டுமென்றும், அந்தப் பிரேரணை அர்த்தமற்றதென்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளபெயர்களை விட மற்றும் பலர் உதவி செய்திருக்கிறார்களென்றும் ஒரே நேரத்தில் பேசத் தொடங்கினர்.

ஒருவரை மட்டும் நின்று பேசும்படியும் மற்றையோரை ஆசனத்தில் அமரும்படியும் மேயர் பலதடவைகள் கேட்டும் அவர்கள் ஆசனத்தில் அமராததால் 'நீங்கள் பேசுங்கள் நான் போகிறேன்' என்று கூறி கூட்ட நடவடிக்கைகளை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்துச் சென்றார்.

மேயர் தமது அறைக்குச் சென்றதும் ஒரு சில அங்கத்தவர்கள் சென்று பேசி...

'விபத்தென்று அறிந்ததும் குருநகர் மக்களுடைய 15-க்கு மேற்பட்ட இயந்திரப் படகுகளும் குருநகர் மக்களும் கொந்தளித்தெழுந்து விபத்து நடைபெற்ற இடத்துக்குச் சென்று விபத்தில் சிக்கிய மக்களை காப்பாற்றுவதில் 27-2-70 இரவு 8-30 மணி தொடக்கம் 28-2-70 அதிகாலை 2 மணி வரை தேடுதல் செய்தும் எதுவித பலனும் கிட்டாமையால் மறுபடியும் 28-2-70 காலை 6 மணி தொடக்கம் அயராது உழைத்து விபத்தில் சிக்கிய சடலங்களை மீட்டுக் கொடுக்க உதவியார் குருநகர் மக்களுக்கும் இயந்திரப் படகு சொந்தக்காரர்களுக்கும் இதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இம்மாநகர சபை நன்றி கூறுகிறது'

## காந்திஜியின் சொந்தக்குரலை நாளை வவனியாவில் கேட்கலாம்

வவனியா, புதன்

வவனியா மாவட்டத்தில் மகாத்மாகாந்தி நூற்றாண்டு விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு வவனியா காந்திநூற்றாண்டுவிழா சபை ஏற்பாடுகள் செய்துவருகின்றது. இம்மாதம் 20ந் திகதி நாள்பூராவும் கொண்டாட்டம் நடைபெறும்.

அன்றுகாலை 10 மணிதொடக்கம் நகரசபை மண்டபத்தில் காந்தியப் படங்களும், காந்தீய இலக்கியங்களும் பொதுமக்களினதும் மாணவர்களினதும் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும். கையால் இயக்கும் அம்பர் சர்க்காவினால் நூல் நூர்க்கும் காட்சியும் காந்தியின் சொற்பொழிவை ஒலிப்பதிவுநாடா மூலம் கேட்கும் வசதியும் செய்யப்படவிருக்கிறது.

பிற்பகல் காந்தியின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு நகரசபை மைதானத்தில் அரசாங்க அதிபர் திரு பி. ஸி. பெரேராவின் தலைமையில் விழாநடைபெறும். பண்ணிசைப் புலவர் திரு வே சிவஞானத்தின் காந்தி அஞ்சலி கீதத்துடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் வவனியா எம். பி திரு சிவசிதம்பரம், நகரசபை தலைவர் திரு ம பொன்னையா, பேராசிரியர் கு நேசையா, தியாகி கோ. இராசகோபால், முதலியார் செ. முத்துத்தம்பி, திரு ஏ எம் பரீத் ஆகியோர் உரை நிகழ்த்துவார்.

சங்கீதபூஷணம் ப முத்துக்குமாரசாமியின் இன்னிசைக் கச்சேரியும் அதன்பின் காந்தியின் சீவிய சரித்திர திரைப் படக்காட்சியும் இலவசமாகக் காண்பிக்கப்படுமென சபைக் காரியதரிசி திரு த. நல்லதம்பி தெரிவிக்கின்றார்.

## கார்மோதிஒருவர் பலியான வழக்கில் எதிரிவிடுதலை

யாழ்ப்பாணம், வியா

மோட்டர் காரை கவலையீனமாக செலுத்தி வீதியால் சென்றுகொண்டிருந்த முத்துத்தம்பி என்பவரை மோதிக் கொலை செய்ததாக கோவிந்தராசா சிவவடிவேலு என்பவருக்கெதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் எதிரி நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

கூளாவடிச் சந்தியில் இச் சம்பவம் நடைபெற்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு டயஸ் முன்னிலையில் இவ் விசாரணை நடந்தது.

எதிரிக்காக ஆஜரான புரக்டர் தளையசிங்கம் யோகநாதன் சம்பவநேரம் மோட்டார் வாகனத்தைச் செலுத்தியவர் எதிரிதான் என்பதை ருசுப்படுத்துவ...

## 'யாழ்ப்பாணத்தையே விபுலானந்தரும் விரும்பினர்'

### பல்கலைக்கழகம் பற்றி ஜி ஜி

சுழிபுரம், புதன்

கொழும்பு, காலி: மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கனிஷ்ட பல்கலைக் கழகங்களே அமைக்க பணமில்லாமல் அரசாங்கம் திண்டாடும்போது வசதிகள் குறைந்த இடத்தில் தனது செலவில் அரசாங்கம் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க எப்படி முன்வரும்? காலஞ்சென்ற சேர் பொன் இராமநாதன் ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுக நாவலர் மழவராயர் ஆகியோரின் தர்மசாதனங்களைக் கொண்டு வடபகுதியில் தமிழ்ப் பல்கலைக கழகத்தை நிறுவுவதே பொருத்தமாகும். என்று தமிழ்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம். பியுமான திரு ஜி ஜி. பொன்னம்பலம் இன்று கூறினர். சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரிஉயர் வகுப்பு மாணவர் மன்றப் பேரவையில் திரு. ஜீ ஜீ இன்று உரையாற்றினர்,

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இலங்கையில் மேலும் ஓர் சர்வகலாசாலை ஸ்தாபிக்க வேண்டுமானுல் அது யாழ்ப்பாணத்தில்தான் நிறுவ வேண்டும் என 1927-ல் சுவாமி விபுலானந்தரும் 1960-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட நீலன் கமிசனர் இரண்டாயிரத்துக்கு மேலாகும், திருக்கோணமலை மட்டக்களப்பு ஆகிய இடங்களிலிருந்து செல்பவர்கள் தொகை பத்துக்குமேல்படமாட்டாது.

தமிழ்பேசும் இனம் கல்வியினுல்தான் முன்னேற முடியும். கல்வித்தரத்தின் முடியாக விளங்குவதுதான்சர்வகலாசாலையாகும். கொழும்பு பேராதனை ஆகிய இடங்களிலுள்ள சர்வகலாசாலையில் மாணவர்கள் பல்வகையான கஷ்டங்களால் கல்விகற்க முடியாது அவதிப்படுகின்றனர். ஆகையால் வடபகுதியில் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டியது அவசியம்.

அன்று பணம் படைத்தவர்கள் தான் சர்வகலாசாலை போகலாம் இன்று அப்படியல்ல ஏழைப் பிள்ளைகளும் போகலாம். அனேகமாகச் செல்பவர்கள் பரம ஏழைகளே. அவர்கள் அதிக செலவு இல்லாமல் சுலபமாக கற்க வடபகுதியே பொருத்தமாகும். மன்றச் செயலாளர் நன்றியுரைகூறினர்.

## யாழ் ஐக்கிய லாபநிதி

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் ஐக்கிய ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னர். மேயர் சொல்லியும் அந்த அங்கத்தவர்கள் ஆசனத்தில் அமராமல் உரத்த குரலில் பேசத் தொடங்கியதால் சபை கூட்டத்தை மேயர் ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

திரு போல்ராஜா தமது பிரேரணையை வாசிக்க எழுந்ததுமே அப்பிரேரணையின் பின்பகுதியில் குறிப்பிடப்பட்ட சில பெயர்களை நீக்கிவிட்டு பொதுவாக நன்றி தெரிவிப்பதாகப் பிரேரணையை வாசிக்கும்படி யோசனை கூறினார்.

இச்சமயத்தில் வேறுசில அங்கத்தவர்கள் எழுந்து போகிறேன்' என்று கூறி கூட்ட நடவடிக்கைகளை ஐந்து நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக அறிவித்துச் சென்றார்.

மேயர் தமது அறைக்குச் சென்றதும் ஒரு சில அங்கத்தவர்கள் சென்று பேசினர் மற்றும் சில அங்கத்தவர்கள் சபைக்குள்ளேயே எழுந்துநின்று ஒருவரோடொருவர் பேசத் தொடங்கினர். ஐந்து நிமிடங்கள் கழித்து மேயர் தமது ஆசனத்தில் வந்து அமர்ந்ததும் திரு. ஏ. போல்ராஜா பின்வருமாறு தமது பிரேரணையைத் திருத்தி வாசித்தார்.

உழைத்து விபத்தில் சிக்கிய சடலங்களை மீட்டுக் கொடுக்க உதவி...அருநகர் மக்களுக்கும் இயந்திர படகு சொந்தக் காரர்களுக்கும் இதனுடன் சம்பந்தப்பட்டவர்களுக்கும் இம்மாநகர சபை நன்றி கூறுகிறது'

இந்தப் பிரேரணையை மாநகரசபை உறுப்பினர்கள் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். தீர்மானம் நிறைவேறியது.

யாழ்ப்பாண மாநகரசபையின் மாதாந்தக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் மேயர் திரு. தா. ச. துரைராசா தலைமையில் கூடியது.

பல பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

# மேயருக்கு கார் வாங்க ஒருவர்மட்டும் எதிர்ப்பு

'ஏனைய மாநகரசபைகளின் முதல்வர்களின் உத்தியோக பாவிப்புக்காக ஆங்காங்கு அச்சபைகளின் செலவில் மோட்டார் வாகனங்கள் இருப்பதுபோல் யாழ்ப்பாண மாநகரசபையின் முதல்வர்களுக்கும் உத்தியோக பாவிப்புக்காக இம் மாநகரசபையின் செலவில் ஒரு மோட்டார் வாகனம் வாங்குவதென்று இச்சபை தீர்மானிக்கிறது' என்னும் பிரேரணையை திரு. நீ. அந்தனிப்பிள்ளை கொண்டுவந்தார்.

இப்பிரேரணை மீது திரு. கே. வி. தெய்வேந்திரன் பேசுகையில் மேயரின் பாவிப்புக்குப் புதிய கார் வாங்கிக் கொடுக்கும் அதே சமயம் அங்கத்தவர்களுக்குப் புதிய சைக்கிள்களை வாங்கி கொடுக்க வேண்டுமென்று யோசனை கூறினார்.

திரு. ஏ.விசுவநாதன் பேசுகையில் சபையின் இப்போதைய நிதிநிலைமையில் புதிய கார் வாங்குவதற்கு சுமார் 50,000 ரூபாய் செலவாகுதென்றும் இது அநாவசியமான செலவென்றும் கூறினார்.

'கார்வாங்கினாலும் அது மாநகர சபையின் சொத்தாகவே இருக்கும்' என்று மேயர் குறுக்கிட்டுச் சுட்டிகாட்டினார்.

ஆனாலும் மேயரின் பாவனைக்காகப் புதிய கார் ஒன்றை வாங்குவதைத் தாம் ஆட்சேபிப்பதாக திரு. விசுவநாதன் சொன்னார்.

வேறு எவரும் ஆட்சேபிக்காததால் பிரேரணை நிறைவேறியது. (கு.வி.ம.)

## இன்று

வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய 16-ம் திருவிழாவாகிய இன்று மாலை 6—7-30வரை திரு வி. நல்லையாவின் பிரசங்கமும் சுவாமி ரிஷப வாகன சப்பரத்தில் வீதிவலம் வருதலும் இரவு 8-30—9-30 வரை திருமதி சரோஜினி தனபாலசிங்கத்தின் இன்னிசைக்கச்சேரியும் நடைபெறும்.

---

## குளிர்த்தி அபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

திருவண்ணை கன்னதிட்டி ஸ்ரீகாளிதேவி மகா குளிர்த்தி அபிஷேகம் இம் மாதம் 22ல் நடைபெறவிருக்கிறது

# செனட்டில் மகாவலி விவாதம் நேற்று ஆரம்பமாகியது

## எதிர்க்கட்சியினர் பங்குபற்றவில்லை

கொழும்பு, புதன்

"அர்த்தமில்லாத அப்பாற்பட்ட காரணங்களைக் காட்டி மகாவலித் திட்டத்துக்கு எதிராக எதிர்க்கட்சியினர் பிரச்சாரம் செய்துவருகிறார்கள். அவர்கள் கூறுவதுபோல, நாட்டை அடைவுவைக்கவும் முடியாது விற்கவும் முடியாது" என்று நீதிஅமைச்சர் செனட்டர் திரு. ஏ எவ் விஜயமானே இன்று செனட்சபையில் கூறினார்

மகாவலிஅபிவிருத்திசபை மசோதாவை நிதி அமைச்சர் செனட் சபையில்சமர்ப்பித்துப் பேசினார். இம் மசோதா மீதான விவாதம் இன்று செனட்டில் ஆரம்பமாகியது. எதிர்க்கட்சியினர் எவரும் கலந்து கொள்ளவில்லை. இம் மசோதா பற்றியும் ஆட்சிமன்றத்தில் பிரதமரின் சொற்பொழிவு பற்றியும் ஆராய்ந்த பின்னரே கலந்து கொள்வதென்று எதிர்க்கட்சியினர் முடிவு எடுத்துள்ளனர்.

திரு ஏ எவ். விஜயமானே மேலும் பேசுகையில் மகாவலி திசை திருப்பும் திட்டம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வழி வகுக்கும் என்றும் கூறினார்,

செனட்டர் திரு கே. எம் பி. ராஜரத்தின பேசுகையில் எதிர்க்கட்சியினர் தேர்தல் பிரச்சாரத்துக்கு மகாவலியை பாவிக்கிறார்களென்றும் பொதுமக்கள் மத்தியில் எதிர்க் கட்சியினர் நேரிடையாகச்சென்றுஇதற்கான விளக்கம் கொடுக்க முடியாதிருக்கிறார்களென்றும் கூறினார், இன்று பகல் 2-30 மணிக்கு ஆரம்பமான விவாதம் இரவு 8மணிக்கு முடிவடைந்தது மீண்டும் விவாதம் நாளை காலை 10 மணிக்கு தொடர்ந்து நடைபெறும்,

---

## ராஜினாமா

யாழ்ப்பாணம், வியாழன்

மயிலிட்டி கிராமசபையின் 6-ம் வட்டார அங்கத்தவர் திரு மா, இளையதம்பி தனது பதவியிலிருந்து ராஜினாமாச் செய்வதாகத் தெரிவித்து உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுபபிவைத்துள்ளார், (மல். நி)

காந்தியும் காந்தியின் ... பொழிவை ஒலிப்பதிவுநாடா மூலம் கேட்கும் வசதியும் செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் காந்திஜியின் திருவுருவப்படம் ஊர்வலமாக ... கச்சேரியும் அதன்பின் ... யின் ஜீவிய சரித்திர நிழைப் படக்காட்சியும் இலவசமாகக் காண்பிக்கப்படுமென விழாச்சபைக் காரியதரிசி திரு த. நல்லதம்பி தெரிவிக்கின்றார்

## அப்பல்லோ-12 வீரர்களின்

# திருமலைவிஜயம்பற்றி அறிவிக்கப்படவில்லையாம்

### அரசாங்கஅதிபர், நகரசபைத்தலைவர் கண்டனம்

திருகோணமலை, புதன்

அப்பல்லோ-12 வீரர்களின் திருகோணமலை விஜயம் பற்றி திருகோணமலை அரசாங்க அதிபருக்கும், நகரசபைத் தலைவருக்கும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவிலலையாம். இது பற்றி அரசங்க அதிபர் திரு. சோமபாலா குணதீரவும், நகரசபைத்தலைவர் டாக்டர் சிவானந்தமும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அம்புலி வீரர்களை திருமலையில் பொதுமக்கள் எவரும் கண்டுகொள்ள அனுமதிக்கப்படாத காரணம் பற்றி நமது நிருபர் அரசாங்க அதிபரிடம் கேட்டபோது, வீரர்களின் வருகைபற்றிதமக்கே தெரியாதெனப் பதிலளித்தார். "சந்திரவீரர்களின் வருகைபற்றி எனககு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவில்லை, இது திருகோணமலை மக்களுக்கும் எனக்கும் செய்த அவமரியாதையாகும்" என அரசாங்க அதிபர் நமது நிருபரிடம் கூறினார்.

அரசாங்க அதிபர் மேலும் கூறியதாவது:

திருக்கோணமலைக்கு சந்திர வீரர்கள் வரப்போவதாக நான் பத்திரிகைகளில் படித்தேன் இவர்களுடைய வருகைபற்றி உத்தியோக பூர்வமான அறிவிப்புஎனக்கு கிடைக்குமென எதிர்பார்த்தேன். இரண்டு நாட்கள் சந்திரவீரர்கள் திருக்கோணமலையில் தங்கியிருந்ததாக அறிந்தேன். ஆனல் நான் அவர்களைப் பார்க்கமுடியவில்லை. இது திருக்கோணமலை மக்களுக்கும் எனக்கும் செய்த அவமரியாதையாகும்."

திருக்கோணமலை நகராண்மைக் கழகத்தலைவர் டாக்டர் சிவானந்தம் கூறியதாவது:

சந்திரவீரர்களுக்கு ஒரு பொதுவரவேற்பு வைக்க வேண்டுமென விரும்பிநான் கடற்படை அதிகாரிகளுடன் தொடர்புகொண்டேன். எனதுவேண்டுகோள் மறுக்கப்பட்டது. கடற்படைத் தளபதி இராஜன் கதிர்காமர் வீரர்களை வரவேற்பதற்கான அனுமதியைத்தர மறுத்துவிட்டார்

---

## யோகசுவாமிகள் குருபூசை

யாழ்ப்பாணம், வியா,

கொழும்புத்துறை ஆச்சிரமத்தில் யோகசுவாமிகள் குருபூசை இன்று நடைபெறும். இன்று காலை 4மணிக்கு தொடங்கி யாழ் சிவதொண்டன் நிலயத்தில் அபிஷேக ஆராதனை நடைபெற்றபின் பாதயாத்திரை ஆரம்பமாகி குருபூசைநடைபெறும் ஆச்சிரமத்தை வந்தடையும்.

## ...பசும் யந்திர மனிதன்

டோக்கியோ, மார்ச் 18

ஜப்பானில் ஒஸ்காகாவில் நடைபெறும் உலக பொருள் கண்காட்சியில் சோவியத் யூனியன் அதிசயமான யந்திர மனிதன் ஒருவனை காட்சிக்கு வைத்திருக்கின்றது.

---

## பகிஷ்கரிப்பார்

யாழ்ப் ாணம், வியா.

இன்று ராஜாங்க அமைச்சர் யாழ்ப்பாணத்தில் கலந்துகொள்ளவந்த நிகழ்ச்சியிலும் பங்குபற்ற மாட்டேனென யாழ் மேயர் திரு துரைராஜா நமது நிருபரிடம் தெரிவித்தார் கடைசி நேரம்வரை அழைப்பை எதிர்பார்த்ததாகவும் ஆனல்தமகது அழைப்பு அனுப்பப்பட வில்லையென்றும் கூறினார்.

விசாரணை நடந்தது.

எதிரிக்காக ஆஜரான புரக்டர் தளையசிங்கம் யோகநாதன் சம்பவநேரம் மோட்டார் வாகனத்தைச் செலுத்தியவர் எதிரிதான் என்பதை ருசுப்படுத்துவதற்கான சாட்சியங்கள் இதுவரை ஆஜராகவிலலை என்றும் எதிரியை விடுதலை செய்யும்படியும் நீதிபதியிடம் கேட்டார். நீதிபதி எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

சர்வகலாசாலை ஸ்தாபிக்க வேண்டுமானால் அது யாழ்ப்பாணத்தில்தான் நிறுவ வேண்டும் என 1927-ல் சுவாமி விபுலானந்தரும் 1960-ம் ஆண்டு நியமிக்கப்பட்ட நீலன் கமிசனர் 1963ம் ஆண்டு குணவர்த்தனவிஜயவர்த்தன போன்றவர்களும் கூறியுள்ளனர். புள்ளிவிபர அடிப்படையில் வடபகுதியில் இருந்து சர்வகலாசாலையில் கல்வி கற்கச் செல்லும் மாணவர்தொகை

### சுகாதார அமைச்சர் வரவில்லை

# நிரந்தரக் காரியதரிசி நாளை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம் வியா

3 நாள் உத்தியாக விஜயத்தை மேற்கொண்டு சுகாதார அமைச்சின் நிரந்தக் காரியதரிசி திரு சிபாலசிங்கம் நாளை யாழ்ப்பாணம் வருகிறார் இவர் 23ம்திகதிவரை இங்கு தங்கியிருந்து வடபகுதியிலுள்ள பல ஆஸ்பத்திரிகளுக்கு நேரில் விஜயம் செய்துபுதிய கட்டிடங்களையும் திறந்து நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுகிறார்

நாளைக்காலை 8 மணிக்கு பலாலிவிமான நிலையத்தை வந்தடையும் திரு பாலசிங்கம்,9 30மணிக்கு பெரியாஸ்பத்திரிக்கு விஜயம் செய்வார், மாலை 3மணிக்குதர்மபுரத்தில் அமைக்கப்பட்ட மருத்துவ நிலையத்தை திறந்துவைப்பார், மாலை 6மணிக்கு கிறிஸ்தவக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளுதல். 21ம் திகதி காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரி புதிய நிர்வாகக் கட்டிடத்தை திறந்து வைத்துவிட்டு அனலைதீவு செல்வார் அனலைதீவில் காலை 11 மணிக்கு புதிய ஆஸ்பத்திரி கட்டிடத்தை திறந்துவைப்பார் மதியபோசனத் தின்பின்னர் மாலை 1 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு கோப்பாய் செல்வார். கோப்பாயில் புதிகாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வார்ட்டுகளையும் பார்த்த பின்னர் வல்வெட்டித்துறையில்ஆஸ்பத்திரிநிர்வாகக்கட்டிடத்தையும் திறந்துவைப்பார்

22-ம் திகதி காலை தெல்லிப்பழை புதிய ஆஸ்பத்திரி கட்டிடத்தைப் பார்வையிடுவார் காலை 9-30மணிக்கு தெல்லிப்பழை கூட்டுறவு ஆஸ்பத்திரிகது விஜயம் செய்துவிட்டு அன்று காலை 11மணிக்கு கொழும்பு திருப்புவார்

## சதாசிவம் தமிழ்துறை பேராசிரியர்

கொழும்பு, புதன்

கலாநிதி ஆ, சதாசிவம் கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராக நியமனம் பெற்றுள்ளார்

# "ஈழநாடு"

## பாலைதீவு நிவாரணநிதி

இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் 'பாலைதீவு விபத்து நிவாரணநிதி', 'ஈழநாடு' யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

### உதவி வழங்கியோர்:

| | |
|---|---|
| கே. ச. சுப்பிரமணியம். மூன்றும்குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் | 15-00 |
| அன்பு புத்தகசாலை அன்புபாலர் பாடசாலை அழகு நெசவகம் (காசோலை) | 40-00 |
| வ. செல்லத்துரை, ஞானவாச,ஏழாம் கட்டை சண்டிலிப்பாய் (தபற் கட்டளை) | 10-00 |
| யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக்கழகம் சிரமதானம் மூலம் சேர்த்த தொகை | 147-03 |

னர்.

## யாழ் ஐக்கிய லாபநிதி

யாழ்ப்பாணம், வியா

யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி சேமிப்பு வைப்பாளர் சங்கத்தின் பிரதிநிதிகளாக ஒவ்வொரு ஊரிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டவர்களின் கூட்டம் இம்மாதம் 21-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் மலாயாசங்கக் கட்டிடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது

---

## சேதுராமன் சகோதரர்கள் இன்று வரமாட்டார்கள்

உடுப்பிட்டி, வியா

'தில்லானு மோகனும்பாள்' புகழ் நாதஸ்வர வித்துவான் சேதுராமன் சகோதரர்கள் தாம் எதிர்பாராத விதமாக இன்றைய கரவெட்டி நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியாதிருப்பதாக தமிழகத்திலிருந்து தொலைபேசி மூலம் அறிவித்தனர்.

இன்று இரவு கரவெட்டி யாக்கரை பிள்ளையார் கோவிலில் அவர்கள் நாதஸ்வர நிகழ்ச்சி நடைபெறவிருந்தது

இம்மாத இறுதிக்குள் யாழ்ப்பாணம் வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## கம்போடிய இளவரசர் அகற்றப்பட்டார்

நாம்பன், மார்ச், 18

கம்போடியஅரசின் தலைமைப் பதவியிலிருந்து இளவரசர் சிகானுக அகற்றப்பட்டிருப்பதாகஇன்றுவானொலி அறிவித்தது. மன்னர் சபையும்தேசியசட்டசபையுஇந்த முடிவை மேற்கொண்டிருப்பதாக அறிவிககப்பட்டது.

இளவரசர் சிகானுக இப்போது மாஸ்கோவிலிருந்து பீகிங் புறப்பட்டுள்ளார்.

---

கொழும்பு,புதன்

கொழும்பில் நடைபெறவிருக்கும் நடுநிலைமைநாடுகளின் அதிகாரிகள் மாநாட்டில் ஆசிய அபிவிருத்தி விஷயங்களுக்கு அடுத்தபடியாக பொருளாதார அம்சங்களில் கூட்டு முயற்சிகள் மேற்கொள்ளும் விஷயம் முக்கியத்துவம் பெறக்கூடும் என்று வெளிநாட்டு அமைச்சுவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென். ஜோன்ஸ் - சென்றல்

# 72-வது மாபெரும் கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பம்

— நமது நிருபர் 'தேவா' —



சென். ஜோன்ஸ் கல்லூரி கோஷ்டி



யாழ். மத்திய கல்லூரி கோஷ்டி

யாழ்ப்பாணம், வியா 72-வது மாபெரும் கிரிக்கெட் போட்டி நாளை யாழ் மத்தியகல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

வடமாகாணத்திலேயே மிகப் பெரிய மோதலும் கிரிக்கெட் பிரியர்களின் ஏகோபித்த அபிமானத்தையும் பெற்ற கிரிக்கெட் மோதல், சென்றல்-சென் ஜோன்ஸ் மோதல்.

நாளையும் நாளைமறுதினமும் நடைபெறும் இம் மோதலில் யார் வெற்றி பெறுவார்கள் என நிதானமாகக் கூற முடியாவிட்டாலும் கடந்த வருடங்களைப் போலல்லாமல் இம்முறை ஒரு கோஷ்டி நிச்சயம் வெற்றி பெறும்என கிரிக்கட் வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

...ளது. யாழ் மத்தியகல்லூரி மொத்தம் ஏழு போட்டிகளில் பங்குபற்றி நாலில் வெற்றியும் இரண்டில் சமமுடிவும் ஒன்றில் தோல்வியும் அடைந்துள்ளது.

### சென் ஜோன்ஸ் முன்னணி

இவ்விரு கல்லூரிகளுக்குமிடையில் கடந்த 71 வருடங்களாக நடைபெற்ற கிரிக்கெட் மோதல்களில் கூடுதலான போட்டிகளில் சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது. சென்ற வருடம் நடைபெற்ற போட்டியில் யாரும் வெற்றி பெறாத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

### கோஷ்டிகளுக்கு தலை...

இந்த கிரிக்கெட் மோத...

### வீதிகள் மூடப்படும்

இப்போட்டி நடைபெறும் இரு நாட்களும், யாழ். மத்திய கல்லூரியின் முன் வீதியும், சுப்பிரமணியம் பூங்காவின் பின் வீதியும், பொது மக்களின் பாவனைக்கு விடாது மூடப்பட்டிருக்கும் எனத் தெரிய வருகிறது.

### ரசிகர்களுக்கு வசதி

சென்ற வருடங்களை விட இம்முறை, இப்போட்டி நடைபெறும், யாழ். மத்திய கல்லூரி மைதானம் மிக்வும் அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ரசிகர்களையோ அல்லது மாணவர்களையோ வெய்யில் தாக்காத வண்ணம், மைதானத்தை சுற்றி [illegible] அளவில் [illegible] போடப் பட்டுள்ளன.

சென் ஜோன்ஸ் கோ...

என் இராஜதுரை: தமது கோஷ்டி தோல்வியின் கட்டத்தை அடையும் போது, நிதானமாக நின்று துடுப்பெடுத்தாடி தோல்வியை தவிர்க்கும் இவர், சிறந்த பந்து தடுப்பு வீரரும் கூட.

ஆனந்தலிங்கம்: கிரிக்கெட் உலகில புதியவராக விளங்கும் இவர், விக்கெட்டுக்கு மிக அண்மையில் நின்று பந்தை ஏந்தக் கூடியவர். மிக வேகமாக ஓட்டங்களைச் சேகரிக்கவும் கூடியவர்.

சி ரட்ணராசா: மிகவேகமாக பந்து வீசக்கூடிய இவர், கிரிக்கெட் உலகிற்குப் புதியவர்.

எம் ஜெயந்திரா: இக் கோஷ்டியில் இரண்டு வருட அனுபவம் பெற்ற இவர், துடுப்பெடுத்தாடுவதிலும், பந்து தடுப்பதிலும் சிறந்த அனுபவம் பெற்றவர். சிறந்த பந்துதடுப்புவீரர். மின்னல் வேகத்தில் ஓட்டங்களை சேகரிக்கக்கூடியவர்

எஸ். ஜேயலிங்கம்:- இக் கோஷ்டியின் ஆரம்பபந்து வீச்சு வீரர் ஆபத்து நேரங்களில் நிதானமாய் துடுப்பெடுத்தாடக் கூடியவர் மைதானத்தில் எப்பகுதியிலும் நின்று பந்து தடுப்பதில் வல்லவர் கிரிக்கெட் உலகுக்குப் புதியவர்.

எம். அபூபக்கர்:- சிறந்ததுடுப்படி வீரராகவும், பந்து தடுப்பு வீரராகவும் விளங்கும் இவர், இக்கோஷ்டியில் இரண்டு வருட அனுபவம் உள்ளவர்.

ஹன்டி:- சிறந்த பந்து வீச்சு வீரராக விளங்கும் இவர், இக்கோஷ்டியில் புதியவர்.

கே. பிரேமச்சந்திரன்: சிறப்பாகப் பந்து வீசக்கூடியவர் துடுப்பெடுத்தாடுவதிலும் பந்து தடுப்பதிலும் வல்லவர் இவரும் இக்கோஷ்க்குப் புதியவர்,

கே. மகேந்திரன் சாதுரியமாக சுழல்பந்து வீசக் கூடிய இவர், துடுப்பெடுத்தாடவும் கூடியவர். இக் கோஷ்டிக்கு புதியவர்.

கே. என். நைல்ஸ்:- கிறிக்கெட்டில் ஆரம்பவருடம் சிறந்த பந்துதடுப்பு வீரரும் துடுப்படி வீரரும் கூட.

எம் அருளானந்தம்.- பந்து தடுப்பதிலும், துடுப்பெடுத்தாடுவதிலும் சிறந்தவர் இவரும் இக்கோஷ்டிக்கு புதியவர். (தே நி)

### "நினைவை விட்டு அகலாதவர்"

திருக்கோணமலை புதன் "திருக்கோணமலையில் பல அறிஞர்களும், அரசியல் வாதிகளும், சமூகத் தொண்டர்களும் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குள் எமது நினைவை விட்டகலாதவராக இருப்பவர் அமரர் ஏகாம்பரம்."

திருக்கோணமலையில் நடைபெற்ற விளையாட்டு விழாவின்போது விளையாட்டு விழாவை ஆரம்பித்து வைத்த நகராண்மைக் கழகத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

மக்ஹெய்ஸர் விளையாட்டரங்கில் விளையாட்டு விழா நடைபெற்றது. அமரர் ஏகாம்பத்தின் முயற்சியினால் தான் இவ் விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டதெனக் கூறி அவரது சேவைகளை டாக்டர் சிவானந்தன் நினைவு கூர்ந்தார்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

1970 வரி, காப்புறுதியுடைய, நல்ல நிலையிலுள்ள 22 ஸ்ரீ 9032 "மென்ஸ்" லொறி. தலைவருக்கு, அரக்கு முத்திரையிட்ட கேள்விவிண்ணப்பங்கள் 4-4-1970 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும் வலி-மேற்கு கூட்டுறவுச்சமாசம், சங்கானையில் பார்வையிடலாம். 1999

யாழ்ப்பாண நகரில் ஆறு பரப்புக்காணி முழுவதும் நாற்பத்தையாயிரம். பகிர்ந்தும் வாங்கலாம். கடனும் கிடைக்கும். வெஸ்ட்டன், தபால் பெட்டி 54, யாழ்ப்பாணம். 1918

கார்

நல்ல நிலையிலுள்ள CI A40 கார் விற்பனைக்குண்டு பார்வையிடும் இடம் ஆசிரிய கலாசாலை, கொழும்புத் துறை. 1927

### புத்தகம்

றிப்போட்

மாணவர் தேர்ச்சி அறிக்கை விரும்பிய விதமாக அழகாக அச்சிட்டுக் கொடுக்கப்படும் விபரங்கட்கும் மாதிரிப்பிரதிகட்கும் ஆசிரியர்கள் தொடர்புகொளக கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை. 193

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
அதிபோயா, போயா 2-30 மணி
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா நடித்த
நான்
(ஈஸ்ட்மென்கலர்)

REGAL JAFFNA
Daily 4 Shows
Kirk Douglas,
Robert Mitchum
in
THE WAY WEST
[color]

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
சுந்தர பிறிந்த
(சிங்களம்)

வல்வெட்டித்துறை
ரஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி நடித்த
அல்லி
4-00p.m. only
PARIS CHAMPAGNE

MANOHARA
JAFFNA
Daily 4-45 7 & 9-45 p.m
Elizabeth Taylor
Marlon Brando
in
Reflection in a
Golden Eye
[Techni Color]

ராணி (யாழ்ப்பாணம்) (தினசரி 3 காட்சிகள்)
ஸ்ரீசங்கர் [இருவேடங்கள்
ஹெலன் குமாரி, மஞ்சுளா நடித்த
மஞ்சள் குங்குமம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த

# ஹரிச்சந்திரா

வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன்-ஏ.வி.எம்.ராஜன்
விஜயநிர்மலா-நாகேஷ்-எம். ஆர். ஆர். வாசு
நடித்த

# பந்தயம்

பாடல்கள்:
கண்ணதாசன்

இசை:
கே வி மகாதேவன்

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)

## வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





## சிவாஜிகணேசன் பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்




---

மாகக் கூற முடியாவிட்டாலும் கடந்த வருடங்களைப் போலல்லாமல் இம்முறை ஒரு கோஷ்டி நிச்சயம் வெற்றி பெறும்என கிரிக்கட் வட்டாரங்களில் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

இவ்விரு கோஷ்டிகளும் இதுவரை கலந்து கொண்ட ஆட்டங்களைப் பார்க்கும்போது சென் ஜோன்ஸ் கல்லூரி இதுவரை தோல்வியே அடையவில்லை: இக்கோஷ்டி மொத்தம் ஆறு போட்டிகளில் பங்குபற்றி மூன்றில் வெற்றியும் மூன்றில் சமமுடிவும் பெற்றுள்

வெற்றி பெற்றுள்ளது. சென்ற வருடம் நடைபெற்ற போட்டியில் யாரும் வெற்றி பெருத நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

### கோஷங்களுக்கு தடை

இந்த கிரிக்கெட் மோதலின் பொருட்டு, இருகோஷ்டிக் கல்லூரிகளின் மாணவர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் வீதிகளில் கூட்டம்கூட்டமாகச் சென்று கோஷங்களை எழுப்பி வாகனப் போக்குவரத்துக்கும் பொது மக்களுக்கும் இடையூறுகள் விளைவிக்கக் கூடாது எனப் பொலிசார் கடும் உத்தரவு

டுள்ளது. ரசிகர்களையோ அல்லது மாணவர்களையோ வெய்யில் தாக்காத வண்ணம், மைதானத்தை சுற்றி மிகப்பெரிய அளவில் கொட்டகைகள் போடப்பட்டுள்ளன.

சென். ஜோன்ஸ் கோஷ்டியில் பங்குபற்றும் வீரர்களின் விபரம் வருமாறு:

**என் தெய்வேந்திரா:** இவர்தான் இக்கோஷ்டியின் காப்டன், இக்கோஷ்டியில்மூன்று வருட அனுபவங்கொண்ட இவர், சிறந்ததுடுப்படி வீரர் யாழ். இந்து, ஸ்கந்தா கல்லூரிகளுடன் மோதியபோது முறையே 71, 69 ஓட்டங்களைப்பெற்றவர். பந்துதடுப்பதிலும் சிறந்தவர் தமது கல்லூரியில் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதையும் பெற்றவர்.

**எஸ். சிவக்குமார்:** இக்கோஷ்டியின் உதவிக் காப்டனுக இருக்கும் இவர் கிரிக்கெட் உலகில் இருவருட அனுபவம் உள்ளவர். இக்கோஷ்டியின் ஆரம்ப துடுப்படி வீரராக விளங்கும் இவர், வலது கையால் சுழல்பந்து வீசுவதில் வல்லவர்.

**ஏ. தேவபாலன்:** இக்கோஷ்டியில் கடந்த இரு வருடங்களாக அங்கம் வகிக்கும் இவர், துடிப்புமிகுந்த விக்கெட்கீப்பராக விளங்குவது மட்டுமன்றி துடுப்பெடுத்து ஆடுவதிலும் சிறந்தவர்.

**பாலஜோதி.** தமது கோஷ்டியில் ஆரம்ப துடுப்படி வீரராகஇருக்கும் இவர், கிரிக்கெட் உலகிற்குப் புதியவர், மைதானத்தின் எல்லாப் பகுதியிலும் நின்று பந்தைத் தடுக்கக்கூடியவர்.

**என். நவீனன்:** சிறப்பாக துடுப்பெடுத்தாடுவதிலும், பந்துதடுப்பதிலும் தீரராக விளங்கும் இவர் கிரிக்கெட் பிரியர்களுக்குப் புதியவர்.

**ஸ்ரீராமரட்ணம்:** இக்கோஷ்டியின் ஆரம்பவேகப் பந்து வீச்சு வீரராக இருக்கும் இவர், இடதுவலதுபக்கமாகவும் சுழற்சியாகப் பந்தை வீசவும் கூடியவர் கிரிக்கெட் உலகிற்குப் புதியவர்.

**ரி மனோகரன்:** இக்கோஷ்டியின் அதிவேகப்பந்துவீச்சு வீரராக விளங்கும் இவர், வேகமாக ஓட்டங்களைச்சேகரிப்பதிலும் கெட்டிக்காரர்

**எச். அல்போன்ஸஸ்:** இவ்வருடம் நடைபெற்ற எல்லாப்போட்டிகளிலும் இடது பக்கததால் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய இவர், வலது கையால் சுழல் பந்து வீசுவதில் சிறந்தவர்.

**செல்வநாயகம்:** இடது கையால் மாற்றி சுழல்பந்து வீசும் இவர், மிகவேகமாக ஓட்டங்களைச் சேகரிக்கக் கூடியவர். கிரிக்கெட் உலகிற்குப் புதியவர்.பந்துதடுப்பதில் சிறந்தவர்.

இவர்,கிரிக்கெட் உலகிற்குப் புதியவர்.

**எம் ஜெயந்திரா:** இக்கோஷ்டியில் இரண்டு வருட அனுபவம் பெற்ற இவர், துடுப்பெடுத்தாடுவதிலும், பந்து தடுப்பதிலும் சிறந்வர்.

**ஆர் அசோக்கா:** வேகமாக பந்தை வீசக்கூடிய இவர், வேகமாக வரும்பந்தை தடுப்பதிலும்,வேகமாக ஓட்டங்களை பெறுவதிலும்வல்லவர்.

யாழ். மத்தியகல்லூரியின் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் வீரர்களின் விபரம் வருமாறு:-

**எஸ்.ராஜசிங்கம்:-** இவர்தான் இக்கோஷ்டியின் காப்டனுக விளங்குகின்றூர் கிரிக்கெட் உலகில்மூன்று வருடங்களாக சிறந்தவிக்கெட் கீப்பராகத் திகழும் இவர் சிறந்த துடுப்படி வீரரும் கூட சென்ற வருடம் யாழ்.தெரிவுக்கிரிக்கெட் கோஷ்டியில் அங்கம் வகித்தவர் தமது கல்லூரியில் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதையும் பெற்றவர்.

**ரி தயாசிங்கம்:-** இக்கோஷ்டியில் கடந்த மூன்று வருடங்களாக அங்கம் வகிக்கும் இவர் துடுப்பெடுத்தாடுவதிலும் பந்து தடுப்பதிலும் வல்லவராவார். வலதுகையால் சுழல்பந்து வீசக்கூடியவர் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதைப்பெற்றுர்.

**கே. ஓ ஜேரட்ணகுமார்:-**3 வருடங்களாக இக் கோஷ்டியில் அங்கம் வகிக்கும் இவர் தமதுகோஷ்டியின் ஆரம்ப பந்து வீச்சு வீரராகவும் ஆரம்ப துடுப்படி வீரராகவும் இருக்கின்றூர். விக்கெட்டுககு அண்மையில் நின்று பந்தை தடுப்பதிலும் வல்லவர் சிறந்த கிரிக்கெட் வீரருக்கான விருதையும் பெற்றவர்.

**எம் ஜெயக்குமார்:-** இக்கோஷ்டியில் 3 வருடங்களாக அங்கம்வகிக்கும் இவர் வேகமாகப்பந்து வீசுவதிலும் சிறப்பாக துடுப்பெடுத்தாடுவதிலும் சிறந்தவர் இம்முறை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் நடந்தபோட்டியில 50ஓட்டங்களைப் பெற்றவர்.

**ஜீ எஸ் விஜேகரன்:-** இரண்டு வருடங்களாகதொடர்ந்து இக்கோஷ்டியில் அங்கம் வகிக்கும் இவர் அழகாகத் துடுப்பெடுத்தாடுவார்.வேகமாகவரும் பந்தை மிகசாதுரியமாக தடுப்பார்.

**ஆர் ரஞ்சித்குமார்:-** கிறிக்கட் உலகில்இருவருட அனுபவம் கொண்டவர். வேகமாகப் பந்துவீசக்கூடியவர். பந்து தடுப்பதிலும் வல்லவர்.

**கே. தங்கேஸ்வரன்:-** இக்கோஷ்டியில் இருவருட அனுபவம் இவர், இக்கோஷ்டியில் இரண்டு வருட அனுபவம் உள்ளவர்.

**ஹன்டி:-** சிறந்த பந்து வீச்சு வீரராக விளங்கும் இவர், இக்கோஷ்டியில் புதிய

**எம் அருளானந்தம்.-** பந்து தடுப்பதிலும், துடுப்பெடுத்தாடுவதிலும் சிறந்தவர் இவரும் இக்கோஷ்டிக்கு புதியவர். (தே நி)

## 53 பேர் கொலை 46 பேர் தற்கொலை

கொழும்பு, புதன்

இவ்வாண்டு பெப்ரவரி மாதத்தில் 53 கொலைகள் நிகழ்ந்துள்ளதாக பொலிஸ் தலைமைக்காரியாலயம் தெரிவித்துள்ளது இதைவிட இதே மாதத்தில் 46 தற்கொலைகளும் நிகழ்ந்துள்ளதாகத் தெரியவருகிறது.

தற்கொலை செய்தவர்களில் அநேகர் கிருமிநாசினி குடித்து இறந்துள்ளார்கள் என பொலிஸ் அறிக்கை கூறுகிறது. மேலும் காதல் விவகாரங்களையிட்டும் குடும்பத் தொல்லைகளாலும் வெறுப்புற்றுத் தற்கொலை செய்து கொண்டவர்கள் தொகை 22 என அந்த அறிக்கை கூறுகிறது.

---

# உசன் இராமநாதன் வித்தியாலயம் முதலிடம்

## 38 பாடசாலைகள் கலந்துகொண்ட மெய்வல்லுநர் போட்டி

மட்டுவில், செவ்வாய்

தென்மராட்சி வட்டாரத்தில் நடைபெற்ற வட்டாரகனிஷ்ட வித்தியாலயங்களின் மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில், 38 பாடசாலைகள் கலந்து கொண்டன. இதில் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம் முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதையடுத்து மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் இரண்டாவது இடத்தையும் கச்சாய் அரசினர் பாடசாலை மூன்ருவது இடத்தையும், மீசாலை விக்னேஸ்வரா நான்காவது இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இந்த மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டியில், உசன் இராமநாதன் மகாவித்தியாலயததைச் சேர்ந்த செல்வன் எஸ். குழநதைவேலு ஆண்களில் சாம்பியனுகவும் கச்சாய் ஜி.ரி.எம்.எஸ்.பாடசாலையைச் சேர்ந்த செல்வி கே. மகேஸ்வரி பெண்களில் சாம்பியனுகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

100 மீற்றர் - கீழ்ப்பிரிவு ஆண்களில், செல்வன் செ. சற்குணராசா (மீசாலை வீரசிங்கம் வித்தியாசாலை) செல்வன் கே. சுப்பிரமணியம் (மட்டுவில் சந்திரமௌலீசா வித்தியாசாலை) செல்வன் ரி. சிவஞானம் (மீசாலை விக்னேஸ்வரா வித்தியாசாலை) ஆகியோரும் 100 மீற்றர் பெண்கள் கீழ்ப்பிரிவில் செல்வி கே. மகேஸ்வரி (கச்சாய் அரசினர் பாடசாலை) செல்வி கே. தனபாக்கியம் (மீசாலை விக்னேஸ்வரா வித்தியாசலை) செல்வி இரத்தினேஸ்வரி (கைதடி முத்துகுமாரசாமி வித்தியாசாலை) ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஆரம்பபிரிவு ஆண்கள் 75 மீற்றர் ஓட்டத்தில் செல்வன் கே. சிவபாதம் (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) செல்வன் கே. சிவசுதன் (உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) செல்வன் கே. முருகதாஸ் (உஞ்ஞவில் அமிர்தாம்பிகை வித்தியாசாலை) ஆகியோர் வெற்றியீட்டி பரிசுகளைப்பெற்றனர்.

திருமதி கந்தசாமி பரிசில்களை வழங்கினர். திரு வி. ரி. நடராசா ஆசிரியர்இந்தப்போட்டியை ஒழுங்குசெய்திருந்தார். மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் போட்டி நடைபெற்றது.

......

## ஊரெழு றேயல்வெற்றி

புத்தூர், புதன்

புத்தூர் வீனஸ் கழகம் நடத்தும் கவிஞர் முசெல்லையாவின் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்துக்காக நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், கரவெட்டி கொமற் விளையாட்டுக் கழகமும் ஊரெழு றேயல் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. இதில் ஊரெழு றேயல் விளையாட்டுக் கழகம் 6-1 கோல்களைப் போட்டு வெற்றியீட்டியது.

புத்தூர் வீனஸ்திடலில் நடைபெற்ற இப் போட்டிக்கு திரு எஸ் ஜெயராசா மத்தியஸ்தராக கடமையாற்றினர்

---

# விளம்பரம்

## யாழ்ப்பாண மாநகரசபை
## ஏல விற்பனையாளர்கள், தரகர்கள் பற்றிய நிரல்

**28-2-70 வரை**

| ஏலவிற்பனையாளர் பெயர் | முகவரி | உத்தரவுச் சீட்டு இல. |
|---|---|---|
| (அ) | | |
| 1. ஆர்.கனகரட்னம் | 35,கொழும்புத்துறை வீதி | 2 |
| 2. கே. ஐயாத்துரை | கோப்பாய் | 3 |
| 3. எஸ். சங்கரப்பிள்ளை | தெல்லிப்பளை | 4 |
| 4. ஏ.பி. எதிர்மானசிங்கே | 14, டேவிட் வீதி | 5 |
| 5. வி. எஸ். குட்டிப்பிள்ளை | 643,கே.கே.எஸ். றோட் | 7 |
| 6. சி. பாண்டித்துரை | மல்லாகம் | 8 |
| 7. ரி.கே. பொன்னுத்துரை | 28/1, யாழ் றோட் | 9 |
| 8. எம். நவரட்னராஜா | மண்டை தீவு | 10 |
| 9. என். தர்மலிங்கம் | 167/1, கோயில் வீதி, நல்லூர் | 11 |
| 10. ஏ. பி. பிரின்ஸ் | 107, மெயின் வீதி | 13 |
| 11. எஸ். எஸ். மாரிமுத்து | சித்தங்கேணி | 14 |
| 12 எம் முருகேசு | புங்குடுதீவு | 15 |
| 13 என். ஸ்ரீரெங்கநாதன் | பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம் | 16 |
| 14 வி. ஏரம்பமூர்த்தி | காரைநகர் | 17 |
| 15 கே. சிவாஸ்காந்தா | அராலி | 19 |
| 16 எஸ் சி. பாலசிங்கம் | அராலி வடக்கு | 20 |
| 17 என். ஆறுமுகம் | சித்தங்கேணி | 18 |
| 18 சி. விசாகரட்னம் | 132,பருத்தித்துறை வீதி | 22 |
| 19 கே. சுப்பிரமணியம் | 24, 1-ம் குறுக்குத்தெரு | 21 |
| 20 சி. தர்மலிங்கம் | உரும்பிராய் | 24 |
| 21 எஸ் சங்கரப்பிள்ளை | புத்தூர் | 23 |
| 22 வி. கோபாலபிள்ளை | 22,ஆஸ்பத்திரி வீதி | 26 |
| 23 எஸ். நரசிங்கம் | தொல்புரம் | 25 |
| 24 ஆர்.எஸ். தர்மரட்னம் | யாழ்ப்பாணம் | 28 |
| 25 கே. சரவணமுத்து | 173,குருசோல்ட் வீதி | 27 |
| ஆ) | | |
| **தரகர்** | | |
| 1 கே. கிருஷ்ணபிள்ளை | 23, ஆஸ்பத்திரி வீதி | 1 |
| (இ) | | |
| **ஏல விற்பனையாளர்** | | |
| 1 எஸ்.ரி.ஏ. வடிவேலு | கே. கே.எஸ். றோட் கோண்டாவில் | 6 |
| 2 ஏ. இரத்தினசபாபதி | 4-ம் குறுக்குத் தெரு | 12 |

ஏ. ரி. சுந்தரம்
ஆணையாளர்,
யாழ்ப்பாண மாநகரசபை.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம். 12-3-70

2000

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 பேர் பலி; 100 பேருக்கு மேல் காயம்

# மேற்கு வங்க குழப்பங்களின் விளைவு

## நிலைமை நீடிப்பதைத் தடுக்க ராணுவம் அழைக்கப்படலாம்

புதுடில்லி, மார்ச் 18

**மேற்கு வங்காளத்தில் நேற்று மார்க்ஸிட் கம்யூனிஸ்ட் கட்சியினர் நடத்திய ஹர்த்தாலின்போது 21 பேர் பலியாகியிருக்கிறார்கள். வேலைநிறுத்தக்காரர்களுக்கும் மற்றவர்களுக்குமிடையில் ஏற்பட்ட சண்டையில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கிறார்கள். நிலைமை மேலும் மோசமானால் அங்கு சென்று அமைதியை ஏற்படுத்துவதற்கு இந்தியராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.**

மேற்குவங்காளத்தில் கூட்டணி மந்திரிசபை முறிவடைந்ததைத் தொடர்ந்து அங்குகலவரங்களும் குழப்பங்களும் தலைதூக்கியுள்ளன. கூட்டணியில் அங்கம் வகித்த பிரதான கட்சியான பாங்களா காங்கிரஸ் விலகிக் கொண்டதோடு அக்கட்சியின் தலைவரும் முதலமைச்சருமான திரு. அஜாய் குமார் முகர்ஜியுடன் இதர மந்திரிகளும் விலகிக்கொண்டனர். இதனால் அங்கு கூட்டணி ஆட்சி முற்றுப் பெற்றுவிட்டது. இதனால் ஆத்திரமடைந்த கூட்டணிக் கட்சிகளில் ஒன்றான மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் ஹர்த்தால் ஒன்றை ஏற்பாடு செய்தனர். இந்த ஹர்த்தாலின் போது பல இடங்களில் கலவரங்கள் இடம் பெற்றுள்ளன. கல்கத்தாவில் நிலைமை மிகமோசமாக விருக்கிறது. தெருக்களில் மார்க்ஸிஸ்டுகளும் மற்றவர்களும் நேரடியாகவே மோதிக்கொண்டனர். கத்திகள் கட்டாரிகளுடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மோதிக்கொண்டதில் 21 பேர் பலியாகியிருக்கிறார்கள். ஏராளமானவர்கள் காயமடைந்திருக்கிறார்கள், கலவரங்கள் இடம் பெற்ற பலவிடங்களில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்து நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தொழில் நிலையங்கள் உள்ள பகுதிகளிலேயே பெருவாரியான கைகலப்புகள் இடம் பெற்றன. வேலைக்கு சென்றவர்களை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாக்கினார்கள். இதனால்பல விடங்களில் ஊரடங்கு சட்டம் அமுலுக்கு கொண்டுவரப் பட்டுள்ளது.

நிலைமைமேலும் மோசமாகும் பட்சத்தில் சமாளிப்பதற்கு தயாராய் இருக்கும்படி ராணுவம் உஷார்படுத்தப் பட்டிருக்கின்றது.

இன்று கவர்னரை துணை முதல்வர் திரு ஜோதி பாசு சந்தித்துப் பேசவிருக்கிறார். மாற்று மந்திரிசபை ஒன்றை அமைக்கும்படி கவர்னர் அவரைக் கேட்டுக் கொள்ளக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது மந்திரிசபை அமைக்கும்படி தாம் கேட்கப் பட்டால் அதைஏற்றுக் கொள்ளப் போவதாகவும் ஆனல் மந்திரிசபை அமைப்பதற்கு சில நாட்கள் அவகாசம் தரும்படி கேட்கப் போவதாகவும் திரு. ஜோதிபாசு அறிவித்திருக்கிறார்.

இதற்கிடையில்மார்க்ஸிஸ்டுகள் புதிய அமைச்சு அமைப்பதை எதிர்க்கும் 8 கட்சிகளுக்கும் கவர்னா அனுப்பியிருக்கும் கடிதத்தில் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான காரணங்களை விளக்கும்படி கேட்டிருக்கிறார்.

## பொலிசார் சோதனை

கல்கத்தா, மார்ச். 18

மேற்கு வங்கத்தில் பல்வேறு பகுதிகளில் உள்ள நக்ஸல் பாரிகள் புகலிடங்களை பொலிசார் சோதனையிட்டதில் ஏராளமான ஆயுதகளும் தோட்டாக்களும் கிடைத்தன.

சுமார் 10 துப்பாக்கிகள் 2 பிஸ்டல்கள் ஒரு ஸ்டென்கன் சில தஸ்தாவேஜுகள் ஆகியவற்றையும் பொலிசார் கைப்பற்றினர்.

## பிரிட்டனில் பயிலும் ஈழத்துப் பெண்மணி

லண்டன், மார்ச் 16

பலாங்கொடையைச் சேர்ந்த செல்வி மாஜறி வின்பிரீடா எனப்படும் பெண்மணி தற்சமயம் வட இங்கிலாந்திலுள்ள லீடஸ் சர்வகலாசாலையில் பயின்றுவருகிறார். கமத்தைப் பராமரித்தல், பயிர் உற்பத்திசெய்தல் அதாவது கிராமப் பொறுயியல் பற்றி இங்கு பயிலும் ஒரே ஒரு இலங்கை மாணவி இவராவார். இலங்கை சர்வகலாசாலையில் பி எஸ். ஸி. (கௌரவ) பட்டம்பெற்ற இவர், லீட்ஸ் சர்வகலாசாலையில் கிராம பொருளியலில் கலாநிதிப் பட்டப்படிப்பை மேற்கொண்டுவருகிறார்.

## கட்டிடம் இடிந்து விழுந்தது

காட்தாங் (கிரீன்லாந்து) மார்ச் 18

எரிவாயு வெடித்ததின் விளைவாக நாலுமாடிக்கட்டடம் ஒன்றுகாட்தாப்பில் இடிந்து விழுந்தது. ஒருவர் பலியானர். 27 பேர் காயமடைந்தனர்.

# ரொடீஷியா சம்பந்தமான ஆஸிய-ஆபிரிக்க தீர்மானம்

## பிரிட்டனும் அமெரிக்காவும் 'வீட்டோ' செய்தன

நியுயோர்க், மார்ச் 18

ரொடீஷியா சம்பந்தமாக ஆஸிய ஆபிரிக்க நாடுகள் ஐ. நா. பாதுகாப்பு சபையில் தாக்கல் செய்த தீர்மானம் என்றின் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் தமது ரத்து அதிகாரத்தைப் பிரயோகித்து முறியடித்துள்ளன.

ரொடீஷியா மீது பிரிட்டன் பலாத்காரம் பிரயோகிக்காததற்கு கண்டனம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை ஆஸிய ஆபிரிக்க நாடுகள் தாக்கல் செய்திருந்தன. தென்னாபிரிக்காமீதும், போர்ச்சுகல மீது பொருளாதார பகிஷ்காரத்தை விஸ்தரிக்கவேண்டும் என்றும் இந்த நாடுகள் வற்புறுத்தியிருந்தன. இந்தத் தீர்மானத்தின் மீது தமது ரத்து அதிகாரத்தைப் பிரயோகம் செய்து அமெரிக்காவும், பிரிட்டனும் நிராகரித்துவிட்டன. ரொடீஷியா சம்பந்தமாக பிரிட்டன் தாக்கல் செய்திருந்த தீர்மானம் ஒன்றும் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டது.

## 3 குழந்தைகளைக் கொன்று தானும் தற்கொலை

ஹைதரபாத், மார்ச் 18

சித்தூர் ஜில்லா கொல்லாபள்ளி கிராமத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் குடும்பக்கஷ்டம் தாளாது தனது மூன்று குழந்தைகளுக்கும் விஷம் கொடுத்து கொலைசெய்துவிட்டு தானும் விஷமருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

## புதிய ஆங்கில விவிலிய நூல் உலகெங்கும் பெரும் கிராக்கி

லண்டன், மார்ச் 18

கடந்த திங்கட்கிழமையன்று உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்ட புதிய ஆங்கில விவிலியநூல் (கிறிஸ்தவ வேதாகமம்) இங்கிலாந்திலும் உலக நாடுகளிலும் அதிவேகமாக விற்பனையாகிவருகிறது

லண்டனிலும் மற்றும் இங்கிலாந்தின் பிரதான நகரங்களிலும் விற்பனைக்கு வந்த முதற் பிரதிகள் அன்றைய தினமே விற்பனையாகின. இதனையடுத்து புத்தக விற்பனையாளர்கள் விடுத்துள்ள கோரிக்கைகளை சமாளிக்க முடியாது பிரசுரிப்பாளர்கள் திண்டாடுகிறார்கள்.

சாதாரண மக்கள் இலகுவில் விளங்கிக்கொள்ளும்படி எளிமையான ஆங்கிலத்தில் அர்த்தம் பிசகாது நுணுக்கமாக இந்நூல் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு வேலைகள் 1947-ம் ஆண்டில் ஆரம்பமாகின. ஆங்கில, ஸ்கொட்லாந்து மற்றும் சுதந்திர திருச்சபைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இவ்வேலையைப் பொறுப்பேற்று நடத்தினர். 1961 ல் புதிய ஏற்பாடு இம்முறையில் மொழி பெயர்க்கப்பட்டு வெளியாகியது இப்பொழுது புதிய ஏற்பாடும், பழைய ஏற்பாடும் மற்றும் வேதாகமத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஏடுகளும் ஒன்றாகச் சேர்ந்து புதிய ஆங்கில விவிலிய நூலாக வெளியிடப்பட்டிருக்கிறது:

புராதன எபிரேபிய, அரமிய, கிரேக்க ஏடுகளிலிருந்த இத்திருமறை நூல் நேரடியாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. நிபுணத்துவம் வாய்ந்த 22 மொழி பெயர்ப்பாளர்களும், எட்டு எழுத்துநடைப் பண்டிதர்களும் இதனை ஆக்கியிருக்கிறார்கள்.

முதல் பதிப்பில் 1,000,000 பிரதிகள் அச்சாகின. இவற்றில் அரைவாசிக்குமேலான தொகை ஆங்கில மொழி பேசப்படும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா, கனடா, ஹொங்கொங் ஆகிய நாடுகளுக்கு பெருந்தொகையில் இந்நூல்கள் அனுப்பிவைக்கப்பட்டன. 10,000 பிரதிகள் வரை ஜப்பான் பெற்றுக்கொண்டது. பிரசுரிப்பாளர்களின் நியூயோர்க்கிலுள்ள கிளை அச்சகங்கள் அரை லட்சத்திற்கும் அதிகமான பிரதிகளை அச்சிட்டு அமெரிக்காவில் விற்பனைக்கு விட்டிருக்கின்றன.

## "வன்முறைகளினால் சமத்துவம் கிடைத்துவிடாது"

— சாவகச்சேரி எம். பி.

மட்டுவில், புதன்

"பலாத்காரம், வன்முறைச் செயல்கள் போன்ற தீய சக்திகளினால் நாம் என்றும் சமத்துவம் பெற்றுவிடப்போவதில்லை. ஆங்காங்கே சமத்துவத்தைப் பற்றிய பொது அறிவைப் புகட்டுவதன் மூலமே மக்கள் மத்தியில் சமத்துவத்தின் உயர்வையும், அதனால் உள்ள பலனையும் புரிய வைத்து, அதன் மூலம் நாளடைவில் நமது மத்தியில் ஏற்றத்தாழ்வற்ற காந்திய கொள்கையின் அடிப்படையில் நல்லதோர் சமுதாயத்தை உருவாக்க முடியும்."

இவ்வாறு நுணாவில் சந்தியில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் பிரசாரக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினார். சாவகச்சேரி நகரசபையின் 5-ம் வட்டார உறுப்பினர் திரு. பி. ஆர். ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சிந்தித்துநடத்தியமாபெரும் ஆராய்ச்சியில் ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதின் மூலமே நமது மத்தியில் மக்கள் பலம் கொண்ட சமுதாயமாக மாறமுடியுமென்றும் சமுதாயபலத்தினால் கோரிக்கைகளைப் பெற முடியும் என்றும் உணர்த்தார். அந்தவழியில் ஈடுபட்டு தன்னுடைய இலட்சியப் பாதையில் வெற்றியும் கண்டார்.

இந்தஅடிப்படை இலட்சியத்தின் வழிச் செல்வதின் மூலமே எமது இனமும் எமது இழந்த உரிமைகளைப் பெறமுடியும். எமது மொழிகலை, கலாச்சாரபண்புகளைப் பெற்றுக் கொண்டு அவற்றைக் காப்பாற்றியும் வர முடியும்.

இதற்கான உழைப்புகள் அனைத்தும் தாய் குலத்திலேயே தங்கியுள்ளது.

இந்த கூட்டத்தில் பாலைதீவில் நடைபெற்ற படகு விபத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் ஆத்மா

# 'மீன்குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுக்கிறார் காமராஜர்'

## கருணாநிதி பேச்சு

சென்னை, மார்ச் 18

"மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பதுபோல் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இந்தி எதிர்ப் ... கொண்டது தி. மு. கழகம். உடலின்மீது பெற்ரோலை ஊற்றிக்கொண்டு கண்கள் வெளியே பிதுங்கிவிழும்போதும், தலை வெடித்துச்சிதறும் ... குரல் கொடுப்போம் இது தான் எங்கள் அண்ணன் கற்றுத்தந்தபாடம்! அந்தப் பாடம் தந்தவரின் படத்தைத் திறந்துவையுங்கள்

## சிவாஜி எம். ஜி. ஆருடன் நடிக்கத் தயாராய்

சென்னை, மார்ச் 18

... [illegible] ... ஜி. ராமச்சந்திரனுடன் நடிப்பதற்குத் தாம்

மைலாய் படுகொலை

## 14 ராணுவ அதிகாரிகள் மீதும் நடவடிக்கை

நியுயோர்க், மார்ச். 18

தென் வியட்நாமில் ... ஜெனரல் ஒருவரும் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கருணாநிதி பேச்சு

சென்னை, மார்ச் 18

"மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக் கொடுப்பதுபோல் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இந்தி எதிர்ப்புப் பற்றிக் கற்றுக்கொடுக்க முன்வந்திருக்கிறார் காமராஜர்" என்று தமிழ்நாடு முதல்வர் திரு. கருணாநிதி கூறினார்.

அரசியல் வானில் புதிய அதிசயங்கள் தோன்றியுள்ளன. எனவே இந்தியாவின் எதிர்காலம் குறித்துக்கூடிப் பேசவேண்டிய காலம்வந்து விட்டதென்றும் அவர் குறிப்பிட்டார்.

மாதவரம் மூலக்கடை என்ற இடத்தில் அவர் ஒரு கூட்டத்தில் மேலும் பேசியதாவது:

இன்று நாட்டில் காமராஜர் இந்தி எதிர்ப்பு வீரராகத் தன்னைக் காட்டிக் கொண்டுவருகிறார். இவர் இந்தியை எதிர்க்கிறாரா அல்லது இந்திராவை எதிர்க்கிறாரா என்பது நமக்குத் தெரியவேண்டும். ஆனால் அவர் நமக்கு இந்தி எதிர்ப்புப் பற்றிப் பாடம் சொல்லிக்கொடுக்க வருகிறார்.

நாம் 30 ஆண்டு கால மொழிப் போராட்ட வரலாறு கொண்டவர்கள்.

தாளமுத்து நடராசனைச் சிறையிலே, அந்த இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்காகப் பலிகொடுத்த காலத்தில் இருந்து. பெல்லாரி சிறைவாசம் ஏற்றுப் பெரியார் அடைபட்ட காலத்தில் இருந்து, அவர் சிறையில் இருந்தபோது பன்னீர்செல்வம்,'என் தோளுக்கு இட்ட மாலையைப் பெரியாரின் தாளுக்கு இடுகிறேன்' என்று தனக்குப் போட்டபட்ட மாலையைப் பெரியாரின் படத்திற்கு அணிவித்துப் பெருமை செய்த காலத்திலிருந்து, இந்தியை எதிர்ப்பதற்கு காங்கிரஸில் இடமில்லை என்றால் காங்கிரஸை விட்டு வெளியேறுகிறேன் என்று நாவலர் சோமசுந்தர பாரதியார் முழங்கிய காலந்தொட்டு, காங்கிரஸிலிருந்து இந்தி எதிர்ப்புக் கொள்கை காரணமாக வெளிவந்து அண்ணாவின் அணியில் சேர்ந்த என். வி. என். வரலாறு துவங்கிய அந்தக் காலந் தொட்டு. இந்தி எதிர்ப்பின் சொந்தக்காரர்கள் நாம்.

ஆனால் காமராஜர் இன்று நமக்கு இந்தி எதிர்ப்புப் பற்றி கற்றுத்தர வருகின்றார். மீன் குஞ்சுக்கு நீந்தக் கற்றுக்கொடுக்கும் வேடிக்கை இது.

இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்காகத் தீக்குளித்த செம்மல்களின் தியாக வரலாறு கொண்டது தி. மு. கழகம்.

உடலின்மீது பெற்றோலை ஊற்றிக்கொண்டு கண்கள் வெளியே பிதுங்கிவிழும்போதும், தலை வெடித்துச்சிதறும் போதும், கருநிறக் கூந்தல் கருகிடும்போதும் 'தமிழ் வாழ்க ஆதிக்க இந்தி ஒழிக' என்று முழங்கிய தங்கங்கள், தமிழகத்தின் சிங்கங்கள், கழகத்தின் அங்கங்கள் இருந்த இயக்கம் இது.

அத்தகைய இயக்கத்திற்கு இந்தி எதிர்ப்புப் பற்றிப் பாடம் போதிக்க வருகிறார் காமராஜர்.

பத்துபிள்ளைகளைப் பெற்றவளுக்கு தலைச்சன் பிள்ளைகாரி மருத்துவம் பார்க்க வந்த கதையைப் போல் இருக்கிறது. காமராஜர் இந்தி எதிர்ப்புபற்றி நமக்கு பாடம் கூறுவது!

மொழியின் மீதுள்ள பற்றால் அவர் இந்தி எதிர்ப்பு பற்றி பேசவில்லை. இதை வைத்தாவது இந்திராகாந்தியை கவிழ்க்க முடியுமா என்று எண்ணுகிறார் அவ்வளவுதான்!

காமராஜரை எதிர்ப்பதற்காகத்தான் நாம் இந்திரா காந்தியை நிபந்தனையற்று ஆதரிக்கிறோம் என்று சிலர் குறைகூறுகிறார்கள்.

இந்திராகாந்தி. அண்ணா படத்தை திறந்து வைக்க சென்னை வந்தபோது அவரை வைத்துக்கொண்டே என்ன கூறினேன்? "மத்திய அரசிடம் உறவுக்குக் காரம் கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம் இதுதான் எங்கள் அண்ணன் கற்றுத்தந்தபாடம்! அந்தப் பாடம் தந்தவரின் படத்தைத் திறந்துவையுங்கள் என்றுதான் கூறினேமே அல்லாமல் நிபந்தனை அற்ற நிரந்தர ஆதரவு தருகிறோம் என்று கூறியா அவர்களை அழைத்தோம?

14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டபோது, வங்கி கட்டிடங்களில் பளிங்குத் தரைகளில்ராஜாக்கள், வணிகக் கோமான்கள், குட்டிக் குபேரர்கள், மிட்டா மிராசுகள் பட்டுப் பீதாம்பரங்கள்தான் நடக்க முடியும்; உதவிபெற முடியும் என்ற நிலையை மாற்றி பெட்டிக் கடைக்காரரும், மிட்டாய்க் கடைக்காரரும் ஏழை எளியோரும் தங்கள் தொழிலுக்கு உதவிகிடைக்கும் நிலை வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டபோது ஏற்பட்டது இந்தக் கொள்கையார் கூறிய கொள்கை?

சென்ற ஆண்டு முதல் அமைச்சர்கள் மாநாட்டில் "வங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்" என்று நான் எடுத்துக் கூறினேன். 'முடியாது' என்று அப்போது மறுத்தவர் மொரார்ஜிதேசாய்! இப்போது அவர் காமராஜருக்கு அருகில் இருக்கிறார்.

ஆகவே, நாம் டெல்லி செய்யும் நல்ல காரியங்களை ஆதரிக்கிறோம்.

## நடிக்கத் தயாராம்

சென்னை, மார்ச் 18

படத் தயாரிப்பாளர்கள் முன்வந்தால் எம். ஜி ராமச்சந்திரனுடன் நடிப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நடைபெற்ற விழா ஒன்றில் பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே சிவாஜி கணேசன் இவ்வாறு கூறினார். அரசியலில் பங்குகொள்வதைவிட, நடிப்பதையே தாம் பெரிதாக மதிப்பதாக சிவாஜி கணேசன் கூறினார்.

இன்னும் 20 ஆண்டுகள் சினிமாவில் நடிக்க விருப்பதாகக் கூறிய சிவாஜி, இதுவரை 140 படங்களில் நடித்துள்ளதாகவும், 15படங்களில் தற்போது நடித்துக் கொண்டிருப்பதாகவும் கூறினார். 'கப்பலோட்டிய தமிழன்' படத்தில் நடித்துள்ளதைத் தம்மால் மறக்கமுடியாதென்றும் அவர் சொன்னார்.

எம். ஜி ஆரும், சிவாஜி கணேசனும ஒரு படத்தில் (கூண்டுக்கிளி) மட்டுமே ஒன்று சேர்ந்து நடித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மீதும் நடவடிக்கை

நியுயோர்க், மார்ச். 18

தென் வியட்நாமில் மைலாய் என்ற இடத்தில் இரண்டாண்டுகளுக்கு முன்னர் அமெரிக்கத் துருப்புகள் நடத்தியதாகக் கூறப்படும் படுகொலைகள் சம்பந்தமாக 14 ராணுவ அதிகாரிகள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த அதிகாரிகள் கடமையில் தவறியதாகக் குற்றஞ் சாட்டப் பட்டுள்ளனர். இவர்களில் மேஜர் ஜெனரல் ஒருவரும், பிரிகேடியர் ஜெனரல் ஒருவரும் உள்ளனர்.

மேற்படி படுகொலைகள் சம்பந்தமாக பல சிப்பாய்கள் ஏற்கனவே விசாரிக்கப்பட்டுவருகிறார்கள். புதிதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ள 14 அதிகாரிகள் சம்பந்மாக மேற்கொண்டு விசாரணைகள் இடம் பெற்றபின்னர் ராணுவக்கோர்ட்டில் இவர்கள் விசாரிக்கப்படுவது பற்றி தீர்மானிக்கப்படும் என்று தெரிகின்றது.

## பிரதமரின் முன்னால் அணிவகுப்பு போராட்டம்?

புதுடில்லி, மார்ச் 18

'காஷ்மீர் போட்டி காங்கிரஸ் அதிருப்தி கோஷ்டி தலைவர் மீர் காஸிம், மாநில மேல் சபையிலுள்ள தமது ஆதரவாளர்களுடன் புதுடில்லியில் பிரதமர் உட்பட கட்சித்தலைவர்கள் முன்பாக அணிவகுத்துநிற்கதிட்டமிட்டிருக்கிறார்.

மேல்சபையில் மீர் காஸிமை ஆதரிக்கும் 15 உறுப்பினர்களில் 11 பேர் ஜம்முவிலிருந்து டில்லிபோய் சேர்ந்துள்ளனர். இக்கோஷ்டியில் உபசபா நாயகர் மாஸ்டர் பேலிராம் குலாம் முகமது, மிர்லஸ்கான் ஆகியோரும் இருக்கின்றனர்.

இன்னும் 20 எம். எல். ஏக்கள் அங்கு போய்ச் சேரக் கூடும்என எதிர்பார்க்கப் படுகிறது.

மாநிலத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை முதன் மந்திரியின் கவனத்துக்கு தாங்கள் பல முறைகொண்டு வந்ததாக அதிருப்தியாளர்கள் கூறினர்.

முதன்மந்திரியை சுயநலவாதிகள் சூழ்ந்துள்ளனர் என்றும் அவர்கள் சூழ்நிலைக்கு பரிகாரம்காண அனுமதிக்க மாட்டார்கள் என்றும் அதிருப்தியாளர்கள் கூறினர்.

## "நாடு சிதறுண்டு போவதை நோக்கமாகக்கொண்டவையல்ல"

### தமது கொள்கைபற்றி பிரதமர் இந்திரா

பெங்களூர், மார்ச் 18

பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தமது அரசாங்கம் பின்பற்றும் கொள்கைகள் நாடு சிதறுண்டு போவதை நோக்கமாகக் கொண்டவை என்றபுகாரை கடுமையாக ஆட்சேபித்துள்ளார். கொச்சியிலிருந்து டில்லி திரும்பும்மார்க்கமாக பெங்களூர் விமான நிலையத்தில் சிறிது நேரம் தங்கியபோது நிருபர்களின் கேள்விகளுக்கு விடை அளித்தார்.

பிரதம மந்திரியின் போக்கை ஆதரிக்காத மாநில அரசுகள்மீது அடக்குமுறை நடவடிக்கைஎடுக்கும் கொள்கைகள் நாட்டை துண்டுபடுத்தாதா என்று நிருபர் ஒருவர் திருமதி இந்திராகாந்தியிடம் கேட்டதற்கு 'இதை வன்மையாக ஆட்சேபிக்கிறேன்' என்று பிரதமர் கூறினார்.

'என்னுடைய கொள்கைகள் என்று எதைக் கூறுகிறீர்கள் இதனை நீங்கள் நிரூபிக்க முடியுமா?' என்று பிரதமர் நிருபர்களைக் கேட்டார்.

உதாரணமாக மைசூருக்கும் தமிழ்நாட்டுக்குமிடையே காவேரி தண்ணீர் தகராறு சம்பந்தப்பட்டவரை திட்டக்கமிஷன் அங்கீகரிக்காத திட்டங்களை மைசூர் அரசு நிறைவேற்றுமானால் அந்த அரசுக்கு மத்திய உதவி நிறுத்தப்படும் என்று மத்திய பாசனமந்திரி டாக்டர் கே. எல். ராவ் மிரட்டியிருக்கிறார். மத்திய அரசு எவ்வாறு மாநில அரசுகளுக்கு உதவுவதை மறுக்க முடியும் என்று நிருபர் இந்திராவிடம் கேட்டார்.

பிரதமர் இதற்குப் பதிலளிக்கையில் 'இது இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்ட விவகாரம். இரு மாநிலங்களிடையே உடன்பாடு உண்டாகாவிட்டால் இவ்விவகாரத்தை 'டிரிப்யூனல்' தீர்ப்புக்கு அனுப்புவதைத் தவிர மத்திய அரசு வேறு எதுவும் செய்ய முடியாது. மத்திய அரசைப் பொறுத்தவரை மாநிலங்கள் அனைத்தையும் சமமாகவே கருதுகிறது. எனவே பாகுபாட்டு பிரச்னை எழவில்லை. டிரிப்யூனலின் தீர்ப்புக்கு ஒரு விவகாரத்தை அனுப்பினால் பெருமளவு காலதாமதமாகும் என்பது யாவரும் அறிந்ததே எவ்விதத்திலும் இந்தக் காலதாமதத்தை தவிர்க்கவே மத்திய அரசு விரும்புகிறது

எனவே மைசூர்—தமிழ்நாடு முதல்மந்திரிகளை சந்தித்து பேச வைப்பதே மத்திய அரசின் நோக்கம் என்று கூறினார்.

'தமிழ்நாடு—மகாராஷ்டிர அரசாங்கங்களின் திட்டங்களுக்கு வெகுவிரைவில் அனுமதி கிடைத்துவிடுவதாக ஓர் எண்ணம் நிலவுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று ஒரு நிருபர் இந்திராகாந்தியிடம் கேட்டதற்கு அவர் சுளுக்கும் மனக்குறை இருக்கிறது' என்று பிரதமர் பதிலளித்தார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியா. 19—3—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற் சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 பேட்டி, 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30செய்திச்சுருக்கம்

**344 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 மாதர் கேட்டவை. 1-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலி பரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-30 சிறுவர் விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம்7-03கிராம சஞ்சிகை, 7-15 சிததிரம், 7-45 வாத்தியஇசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்திச் சுருக்கம்.

கச்சேரி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் கூறினார். சாவகச்சேரி நகரசபையின் 5-ம் வட்டார உறுப்பினர் திரு. பி. ஆர். ஜெயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில்திரு நவரத்தினம்எம்.பி தொடர்ந்து பேசியதாவது.

"அன்று எத்தனையோ கோடிமக்கள் வாழும் பாரத நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டு உழைத்துக் கொண்டிருந்த மகான் மகாத்மா காந்தி, ஆத்மீக வழியிலே எப்படி சுதந்திரத்தைப் பெற முடியும் என்று ...

இதற்கான உழைப்புகள் அனைத்தும் தாய் குலத்திலேயே தங்கியுள்ளது.

இந்த கூட்டத்தில் பாலைதீவில் நடைபெற்ற படகு விபத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் ஆத்மா சாந்திக்காக 2நிமிடபிரார்த்தனையும், 3 நிமிட மௌன அஞ்சலியும் செய்யப்பட்டன.

உடுவில் எம். பி. திரு. வி. தருமலிங்கம், அட்வக்கேட் திரு. எம். ஆலாலசுந்தரம், ஜனாப் முத்துராஜா, ஜனாப் மஷூர் மௌலானா ஆகியோரும் பேசினர்.

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 6-ம் திகதி [19-3-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்**- தொழில்மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழிகோலப்படலாம். இதன்மூலம் பதவியில் உயவுர்ம் கிடைக்கலாம். பேட்டிகாண்பதற்கு ஏற்ற தினம்.

**ரிஷபம்**- முயற்சியால் உயர்ச்சியுண்டு. பணவிவகாரங்களில் நல்ல திருப்பங்கள் காணப்படும்.. வெளியிடத்தில் இருந்து நல்லசெய்தி கிடைக்கும். வீட்டில் சுபகருமங்கள் நடைபெறும், சுகபோகநாள்.

**மிதுனம்**- பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம். முகமன்பேசுவோர் விஷயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும்'

**கடகம்**- இன்னலின் பின்னலால் இதயம்வேனைப்படும். வீட்டில் வைத்தியச் செலவு அதிகரிக்கலாம். நண்பர்களுக்கு மத்தியில் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும். உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

**சிம்மம்**- திடீர் திருப்பம் வாழ்க்கையை வளம்படுத்தும். சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

**கன்னி**- பிரிவின் தாக்குதல் வேதனையைத்தரும், தொழில்துறையிலும் பின்தங்கநேரிடும். சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடம்உண்டு. மனத்திடம் விரும்பத்தக்கது.

**துலாம்**- தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணிய ஸ்தல யாத்திரையொன்று மேற்கொள்ளப்படலம். உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படுகின்றது. உற்சாகமான தினம்.

**விருட்சிகம்**- உறவினர்களின் வருகை உங்களுக்கு உவகையைத் தரும். சுற்றுவட்டாரத்தில் மதிப்பு உயரும். குடும்பத்தில் கணவன் மனைவி உறவு மிகவும் சுமுகமாக இருக்கும். பரவசமூட்டும்நாள்.

**தனுசு**- எதிலும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும். உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு திரைமறைவில் சதிகள் நடைபெறக்கூடும். கொடுக்கல் வாங்கல் மூலம் பிணக்குகள் தோன்றக்கூடும்.

**மகரம்**- வாழ்க்கையில் தென்றல் வீசும். முதியவர்கள் உங்களுக்கு உதவுவதற்கு முன்வருவார்கள். குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். தெய்வத்தின் துணையுமுண்டு.

**கும்பம்**- வாழ்க்கை ஒரு சுமையாகத் தோன்றக்கூடும். கடன்தொல்லைகள் அதிகரிக்கும். நண்பர் ஒருவர் காலை வாரிவிடுவதற்கு முனையக்கூடும். சிந்தனையை ஒருவழிப்படுத்திச் செயலாற்றவும். சுமாரான தினம்.

**மீனம்**- கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள். பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் நிர்வாக உத்தியோகத்தர்கள் செல்வாக்கு வளர்பிறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு
எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லோருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக் கடவன்.
— இயேசு

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box 49, Jaffna Telephone: 389.

யாழ்ப்பாணம் செளமிய வருஷம் மாசிமாதம்
6-ந் திகதி (19-3-70)

## தேசிய இளைஞர் சேவை

தேசிய இளைஞர்சேவை வேலைமுகாம் இன்று மாலை யாழ்ப்பாணம் குருநகரில் ஆரம்பித்துவைக்கப்படவிருக்கிறது. இச் சேவையை இங்கு இன்று வரும் ராஜாங்க அமைச்சர் ஆரம்பித்துவைக்கவிருக்கிறார். நாட்டின் இதர பகுதிகளில் இந்தச் சேவை வேலைமுகாம் தொடங்கப்பட்டுவிட்டபோதிலும் வட பகுதியில் இதில் சேர்வதற்குப் போதிய இளைஞர்கள் முன்வராததால் இதுவரை இளைஞர் சேவை இயக்கம் ஆரம்பிக்கப்படாமலிருந்தது. இந்த இயக்கத்தில் இளைஞர்கள் அதிக அளவில் சேரவேண்டுமென்றும் இதனால் இப்பகுதியின் முன்னேற்றத்துக்கும் வேலையற்றிருக்கும் இளைஞர்களுக்கும் பயன் கிடைக்குமென்றும் சில மாதங்களுக்கு முன்னர் இப் பத்தியில் எடுத்துக் கூறியிருந்தோம். நமது யோசனை வீண்போகவில்லை வடபகுதியில் தேசிய இளைஞர் சேவை இயக்க முதலாவது முகாம இன்று குருநகரில் ஆரம்பமாகிறது.

ஆனாலும் கூட எதிர்பார்த்த அளவு பெருந்தொகையான இளைஞர்கள இந்தச் சேவையில் சேர முன்வரவில்லையாம். இது வருந்தத்தக்கது. வேலையில்லாத இளைஞர்கள் பலர் இங்கு இருக்கின்றனர். உடலுழைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் மனப்பான்மை இல்லாததும் நமது கல்வித்திட்டம் நாற்காலி உத்தியோகத்துக்கே பிள்ளைகளை உருவாக்கிவந்ததும் வருவதும்தான் இதற்குப் பெரும்பாலும் காரணமாகும் என்றாலும் இன்றுள்ள நிலைமைய உணர்ந்து கிடைக்கும் சந்தர்ப்பத்தை தமக்கும் தமது கிராமத்துக்கும் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது வடபகுதி இளைஞர்களின் முக்கிய கடமையாகும்.

வடபகுதியில் எந்தத் தொகுதியையும்விட உடுவில் தொகுதியில்தான் அதிகமான இளைஞர்கள் இந்த இயக்கத்தில் சேர முன்வந்திருக்கிறார்களென்றும் குருநகரில் ஆரம்பிக்கும் வேலை முகாமுக்குப் போதிய இளைஞர்கள் இல்லையெனில் உடுவில் தொகுதியில் ஏழாலையில் இந்த முகாமை ஆரம்பிக்கலாமென்று உடுவில் பிரதிநிதி அரசாங்க அதிபரைக் கேட்டிருக்கிறார். குருநகர் இளைஞர் இயக்க முகாம் இன்று ஆரம்பமாகவிருக்கிறது இன்று குறைவாக இருந்தாலும் நாளை இளைஞர்கள் பலர் இதில் சேரலாம் எனவே குருநகர் முகாமை நிறுத்தவேண்டியதில்லை இத்துடன் உடுவில் தொகுதியில் ஏழாலையிலும் மற்றொரு இளைஞர் சேவை இயக்க முகாமை அங்கு போதிய இளைஞர்கள் சேர்ந்துள்ளதால் தொடங்குவதில் தவறில்லை. குருநகரிலும் ஏழாலையிலும் மட்டுமல்லாமல் ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு முகாம் தொடங்கப்படவேண்டும். இதை மந்திரிகள் வந்துதான் தொடங்கவேண்டுமென்பதில்லை. மந்திரி இன்று ஒருவர், நாளை வேறொருவராகலாம் ஆனால் நகரும் நாடும், நாட்டு மக்களும் என்றும் உள்ளவர்கள். கிராமம், நகரம நாடு இதன் முன்னேற்றமே நாளைய தலைவர்களான இன்றைய இளைஞர்களின உள்ளத்தில் இடம்பெற்றிருக்க வேண்டும்.

தேசிய இளைஞர்சேவை இயக்கம் வடபகுதியில் தாமதமாகித் தொடங்கினாலும் கூட அது துரிதமாக விரிவடைவதும் சிறப்புற இயங்குவதும் வடபகுதி இளைஞர்களின் கையில்தான் உள்ளது.

## "நோயையும் மகிழ்ச்சியுடன்

# இன்று யோகசுவாமிகள் குருபூசை



நாங்கள் சிவனடியார்கள் எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவ தொண்டு செய்வதே எங்கள தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழுகிறோம்.

சந்திரன் சிவதொண்டு ஆற்றுகிறது. சூரியனும் ஏனைய கிரகங்களும் அத்திருப்பணியைச் செய்கின்றன. தேவர்களும் அசுரர்களும் கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர்.

அனைத்துஞ் சிவன் செயல், அவ...

நாங்கள் சிவனடியார், நாங்கள்சிவனடியார்; நாங்கள் சிவனடியார்; நாங்கள் சிவனடியார். இது சரியை, இதுகிரியை; இது யோகம்; இது ஞானம்; இது மந்திரம்; இது தந்திரம்; இது மருந்து.

இந்தத் தியானத்தில் நிற்பதலே நிஷ்டை; இந்த நிஷ்டையுடையோர்க்கு சீலமில்லை; தவமில்லை; விரதமில்லை; ஆச்சிரமம் செயலில்லை.

இவர்கள் தாம் விரும்பியவண்ணம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட பகுதி அசைஸ் விசாரணை

# "வெடிச் சத்தம் கேட்டு எழும்பினேன் வேலி வீடெல்லாம் எரிந்தது"

## சண்டிலிப்பாய் கொலை வழக்கு

யாழ்ப்பாணம், வியா,

சம்பவம் நடந்த தினம் இரவு 1 மணிக்கு நித்திரைக்குப்போனேன். வெடிச் சத்தம் பெருவாரி கேட்டது. எழும்பிப்பார்த்தேன், வேலி வீடெல்லாம்எரிகிறது மூன்று நாலு பேர் படலைக்குப்பின் நின்றனர், தம்பியவை எனக்கொன்றுஞ் செய்யாதீர். எனக்குபிள்ளை குட்டிகள் உண்டென்று கும்பிட்டேன், வேலி எரிந்த வெளிச்சத்தில் அடையாளம் கண்டேன்'

சண்டிலிப்பாய் கொலை தீ வைப்பு வழக்கில் சாட்சியமளித்த பொன்னன் முருகன் மேற்கண்டவாறு கூறினார், இவ்வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் கலாநிதி சி ஜி வீரமந்திரி முன்னிலையில விசாரணைசெய்யப்பட்டது

சாட்சியான பொன்னன் முருகன் மேலும் கூறியதாவது:

எதிரிகள் ஒழுங்கையில் நின்று மேலே வெடித்தார்கள், 15 20 பேர் ஒழுங்கையில் நின்றார்கள். 4 பேரைத்தான் அடையாளம் கண்டேன். ஒழுங்கையில் 2 மணித்தியாலயம் நின்றார்கள், நாங்கள் குளற ரோட்டுக்குப் போய்விட்டார்கள். மகள் லட்சுமியை அன்றிரவு காணவில்லை, மறுநாள் சந்தித்தேன்

எதிரிகள் சார்பில் ஆஜரான அட்வகேட் என் சத்தியேந்திரா சாட்சியைகுறுக்கு விசாரணை செய்தார்.

வழ: படலையடியில் இரவு மூன்று நான்கு பேரைக் கண்டீரா?- 4 பேரை கண்டேன். 4-வது ஆளை அடையாளம் காட்டவில்லை.

வழ: 4 பேரை கண்டது ஞாபகமிருக்கு?- ஆம்.

வழ: 3 பேர் கையில் துவக்கு இருந்தது?- ஆம்,

வழ: 4-வது ஆள் கையில் ஒன்றுமில்லை?- இல்லை.

வழ: ஒவ்வொருவர் கையிலும் ஒவ்வொரு துவக்கு?- ஆம்.

வழ வேறுஒன்றும்இல்லை? ஆம் கண்ட ஞாபகத்தால் சொல்லுகிறீர்? ஆம்

வழ: மாஜிஸ்திரேட் முன் சாட்சியமளித்தபோது 7ம் எதிரி கையில் துவக்கு இருந்தது என்றும் மற்றவர்கள் கையில் பந்தங்கள் இருந்ததாகவும் சொன்னீரா? சொல்லியிருப்பேன்

வழ: சொன்னதாகஞாபகமில்லை? ஆம்

வழ:எதிரிகள் கையில் இருந்தது நேரத்துக்குநேரம் மாறியிருந்ததாக கூறுகிறீர்? இல்லை

வழ:மறுநாள் 5மணிக்கு பொலிஸாருக்கு வாக்கு மூலம் கொடுத்தீர்? ஆம்

வழ: அதுவரை பொலிஸாரை காணவில்லை? ஆம்

வழ: காலையில் பொலிஸாரை காணவில்லையா? காலையில் அவர்கள் வேறு இடத்திற்கு சென்றுவிட்டார்கள் பின்னேரம் தான் வந்தார்கள்

வழ: உமது இடத்திற்கு பொலிஸ் முந்திவந்திருந்தால் முறைப்பாடு கொடுத்திருப்பீர்? 5 மணிக்குத்தான் வந்தார்கள்

வழ;5 மணிவரை வீட்டில் காத்திருந்தீர்?-ஆம்

வழ:காலையில் பொலிசார் உமது வீட்டிற்கு வந்தார்கள்?- நான் காணவில்லை

வழ:மாஜிஸ்டிரேட் வாக்கு மூலத்தில், பொலிசார்வந்த போது வேலி எரிந்துவிட்டதாகச் சொன்னனென்றும் அவர்கள் மற்றவீடுகளை பார்த்துக்கொண்டு போனதால் பெயர் குறிப்பிடவில்லை என்றீரா?-ஆம்

வழ; அந்த நேரமென்றால் எப்ப?- காலையில் பத்து பதினொருமணியிருக்கும்

வழ: காலையில் பொலிசாருக்குவேலிஎரிந்ததாகசொன்னீர்?- 5 மணிக்கு சொன்னேன்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது

சைக்கிள் களவு

## 10 வருடத்தின் பின் பிடிபட்டது

புத்தூர்,புதன்

சுமார் 10 வருடங்களுக்கு முன் களவுபோன சைக்கிள் இப்போது பொலிஸாரின் கையில் சிக்கியுள்ளது, 4 வருடங்களின் முன் களவு போன ஒரு சைக்கிளும் பிடிபட்டது இவற்றை அச்சுவேலிப் பொலிஸார் கைப்பற்றினர்.

1960ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் வைத்து களவு போனதாகக் கூறப்படும் சைக்கிளும், 1966ம் ஆண்டு சாவகச்சேரியில் வைத்துக் களவுபோனதாகக் கூறப்படும் சைக்கிளும் அண்மையில் அச்சுவேலி பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன.

960ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் களவுபோன டி. எல் 99127 இலக்க சைக்கிள் அச்சுவேலி பொலிஸ் நிலைய கொன்ஸ்டபிள் எஸ் தென்னக்கோன்என்பவரால் அச்சுவேலியில் கைப்பற்றப் பட்டது.

1966ம் ஆண்டு சாவகச்சேரியில் வைத்து களவு போன ஏ. எஸ் 999 இலக்க சைக்கிள் அச்சுவேலி பொலிஸ் நிலையக்கொன்ஸ்டபிள் ஏ ஏ நந்தசேனஎன்பவரால் ஆவரங்காலில் வைத்துக் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட இருசைக்கிள்களும் அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் வைக்கப் பட்டுள்ளன.

## நூல் நிலையம் திறக்கவும்

# இவ்வருடம் 20 000 பேர் தமிழ்நாடு திரும்புவர்

கொழும்பு, புதன்

இவ்வருடம் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கு 20,000 பேர் குடிபெயரலாம் என தமிழ்நாடு அரசாங்கம் தெரிவித்துள்ளது. இலங்கையிலிருந்து வரும் இந்தியரின் புனர்வாழ்வுத் திட்டத்துக்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாக நடை... திரும்பலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வருடம் இந்தியா திரும்புவர்களைக் குடியேற்றுவதற்காக திருச்சி மாவட்டத்தில் திருவரங்குளம் என்னுமிடத்தில் 3000 ஏக்கர் நிலமும் மைசூர் மாவட்டத்தில் 5000 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது. நாடு...

...திக்கொள்ள வேண்டியது வடபகுதி இளைஞர்களின் ... இளைஞர்களின் கையிலேதான் உள்ளது.

## "நோயையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும்"

— சுவாமிபிரணவானந்தர்

மாவிட்டபுரம், புதன்

"நோய்கள் எல்லாம் எமது ஆத்ம பரிபக்குவ நிலையை அடைவதற்கு வைத்திய நாதராகிய எம்பெருமானால் எமக்கு அன்போடு அளிக்கும் சிலபடிகள் எனவே அவற்றையும் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ள வேண்டும்" என காங்கேசன்துறை மார்புநோய்வைத்தியசாலையில் 'ஆத்மீகம்' என்னும் பொருள் பற்றி விசேஷ சொற்பொழிவாற்றிய சுவாமி ஸ்ரீபிரணவானந்த சரஸ்வதி கூறினார்.

டாக்டர் வி. இந்திரராசா தலைமைதாங்கினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நோய் அவரவருடைய வினைப்பயனேயாகும் ரமணமகரிஷிகூட புற்றுநோயால பீடிக்கப்பட்டாரென்றால் நாமெல்லாம் எம்மாத்திரம். ஆனால் அவர் அதையும் அன்போடுதான் ஏற்றார். அவையெல்லாம் வெளித்தோற்றத்தில் வேதனையாய் இருக்குமேதவிர அவருக்கு ஆத்மபலத்தினால் அது எதுவிதமான வேதனையையும் கொடுக்கவில்லை" என்று சொன்னார்.

## "பழுத்த அரசியல் ஞானி

குமரபுரம், செவ்வாய்

"பழுத்த அரசியல் ஞானியும் தீர்க்கதரிசியும் சிறந்த தேசாபிமானியுமான அப்புக்காத்து திரு. சு. இராசரத்தினம் சைவவித்தியாவிருத்திச்சங்கத்தின் செயலாளராக நீண்டகாலம் தொண்டாற்றி சைவப்பிள்ளைகளை நூற்றுக்கணக்கான சைவப் பாடசாலைகளில் சைவாசிரியர்களால் சைவச் சூழ்நிலையில் படிக்கச்செய்தார். இவர் பலமாகாணங்களில் சைவப் பாடசாலைகளை அமைப்பதற்குப் பட்டபாடுகள் கொஞ்சமல்ல. சைவாசிரியர் கலாசாலையை ஸ்தாபித்து சைவாசிரியர்களை உற்பத்திபண்ணி நாவலர் கனவை நனவாக்கிய உத்தமர் ஆவர். இவருடைய மறைவு சைவசமயிகளுக்குப் பெரும்கலக்கத்தைஏறபடுத்துவதாகும். அவருடைய இலட்சியத்தைப் பின்தொடர்ந்து அவர்மீது எமக்குள்ள மதிப்பைக்காண்பிக்க வேண்டும்"

இவ்வாறு குமரபுரம் சைவ வித்தியாலயத்தில் இந்துபோட் எஸ். இராஜரத்தினம் மறைவு குறிதது நடைபெற்ற இரங்கற்கூட்டத்தில் பேசிய தலைமையாசிரியர் திரு. ஆர். ரீ. சுப்பிரமணியம் கூறினார்.

திருவாளர்கள் மு சுப்பையா, பு. கிருஷ்ணசாமி, வை. நடராசா திருமதி மீ. சுந்தரலிங்கம் ஆகியோர் மறைந்த பெரியார் சைவ உலகுக்கு ஆற்றிய சேவைகள் பற்றிப்பேசினர்.

சிவநாமபஜனை, திருவாசகம் ஓதல் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

........

## மரண அறிவித்தல்

### திருமதி மலர் இராஜசிங்கம்

யாழ்ப்பாணம் 1-ம் குறுக்குத்தெரு 1வது இலக்கத்தைச் சேர்ந்த திருமதிமலர் இராஜசிங்கம் அல்பேட் (PHI, KKS) கியூபேர்ட் (PWD ஓவசியர் பிபிலை) பாலா (மின்சார சபை கொழும்பு) ஆகியவர்களின் தநதையும், இராஜசிங்கம் (உதவி சுப்பிரின்டென்ட் டோசற் எஸ்டேட். பம்புவெல) கதலின் சிந்தியா ஆகியோரின் மாமனுமாகிய திருவாளர் செல்லப்ப ஞானசேகரம் (மலாயா பென்சனியர்) காலமானார், அன்னாரின் பூதவுடல் நல்லூர் சென் ஜேம்ஸ் சேயக்சாலைக்கு நல்லடககம் செய்வதற்காக இன்று பிற்பகல் 4.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்

1497

## அறிவித்தல்

கரவெட்டி யாக்கரை பிள்ளையார் கோவில் உற்சவத்தில் இன்றிரவு நாதஸ்வர கச்சேரி நிகழ்த்தவிருந்த 'தில்லான மோகனம்பாள்' புகழ் சேதுராமன் சகோதரர்களின் கச்சேரி இன்று நடைபெறமாட்டாது. மறுதிகதி விரைவில் அறிவிக்கப்படும்.

-உபயகாரர்- 1496

...கிறது. ... அத்திருப்பணியைச் செ... கின்றன. தேவர்களும் அசுரர்களும் கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர்களும் அப்படியே தொண்டாற்றி வருகின்றனர்.

அனைத்துஞ் சிவன் ...யல், அவனன்றி அணுவும் அசையாது. நாம் இழந்து போவதுமொன்றுமில்லை. ஆதாயமாக்கிக் கொள்வதும் ஒன்றுமில்லை. இருந்தபடியே இருக்கின்றோம்.

நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. நமக்கு இதம் அகிதம் இல்லை மரணம் பிறப்பில்லை. வேண்டுதல் வேண்டாமை இல்லை. மண்ணாதி ஆசை இல்லை. மனமான பேய் இல்லை. காலதேச வர்த்தமானம் நமக்கு இல்லை. நாம் அனைத்துக்கும் சாட்சியாக விளங்குகின்றோம்.

இந்தத் தியானத்தில் ... நிஷ்டை; இந்த நிஷ்டையுடையோர்க்கு சீலமில்லை; தவமில்லை; விரதமில்லை; ஆச்சிரமச் செயலில்லை.

இவர்கள் தாம் விரும்பியவ...ணம் மண்ணில் வாழ்ந்தார்கள்; வ...கிறார்கள்; வாழ்வார்கள்; இவர் பெருமை யாவருமறியார்; கற்கண்டின் இனிமை கற்கண்டை உமிபவர்க்கே தெரியும்

ஒரு பொல்லாப்புமில்லை.
எப்பவோ முடிந்த காரியம்.
நாமறியோம்.
முழுதும் உண்மை.
ஓம் தத் சத் ஓம்

— யோக சுவாமிகள்
(நற்சிந்தனையிலிருந்து)

## த. அ. வாலிப முன்னணிக்கிளை

திருக்கோணமலை, புதன்

தமிழரசு வாலிபமுன்னணி திருக்கோணமலை சிவன் கோயில் கிளை அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: கி. தெய்வேந்திர பூபதி, செயலாளர்: ந. சி. ஞானகணேசன், உபசெயலாளர்: எஸ் அருள்நந்தி, பொருளாளர்: சி. சுந்தரலிங்கம்.

திருவாளர்கள் சிதம். நவரத்தினம், சி. சந்திரராசா, செ கருணானந்தசாமி, வி. சந்திரதாஸ் மு ஜெகதீஸ்வரன். மா. ஜெகதீஸ்வரன் ஆகியோர் நிர்வாக சபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டர்.

— —

## லொறி விபத்தில் ஒருவர் பலி

திருகோணமலை, புதன்

லொறி குடைசாய்நது ஒருவர் மரணமானார். மாங்குளமென்ற இடத்தில் நடைபெற்ற இவ் விபத்தினால் திருமலையைச்சேர்ந்த சுப்பிரமணியம் மரணமானார்.

## நூல் நிலையம் திறக்கவும்

சுழிபுரம், புதன்

சுழிபுரம் கிராம சபைப் பகுதியில் பொது நூல்நிலையமொன்றை ஆரம்பித்து நடாத்துமாறு இப்பகுதி மக்கள் சுழிபுரம் கிராம சபைத் தலைவரிடம் கேட்டுள்ளனர் நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டதும் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதியான நூல்களை பலரது நினைவாக திரட்டித் தருவதாக வழக்கம்பரை சன சமூக நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

20,000 பேர் குடிபெயரலாம் என தமிழ்நாடு அரசாங்கம் தெரிவித்துள்ளது. இலங்கையிலிருந்து வரும் இந்தியரின் புனர்வாழ்வுத் திட்டத்துக்கான ஏற்பாடுகள் யாவும் துரிதமாகநடைபெறுவதாகவும் 69-70-ம் ஆண்டு உதவிக்கென 63.19 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தமிழ் அரசின் அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். 70-71-ம் ஆண்டுக்கு 115.07இலட்சம் ரூபா செலவிடப்படவிருக்கிறது.

இதுவரை 66,547 பேருக்கு இந்திய பிரஜாவுரிமை வழங்கப்பட்டுள்ளது இதில் 13,229 பேர் மட்டுமே இந்தியாவுக்கு திரும்பியுள்ளனர். இவ்வருடம் சுமார் 20,000 பேர் திரும்புவர்களைக் குடியேற்றுவதற்காக திருச்சி மாவட்டத்தில் திருவரங்குளம் என்னுமிடத்தில் 3000 ஏக்கர் நிலமும் மைசூர் மாவட்டத்தில் 5000 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது. நாடு திரும்புபவர்களுக்கு வசதி செய்துகொடுக்கு முகமாக இராமேஸ்வரம்வரை நடைபெற்ற இலங்கை-இந்திய கப்பல்போக்குவரத்து, தனுஷ்கோடிக்கு மாற்றப்பட்டுள்ளது. தனுஷ்கோடி-இராமேஸ்வர ரயில் சேவை நடத்தவும் ஏற்பாடு நடைபெறுகிறது. இவ்வருடம் பர்மாவிலிருந்து அகதிகள் கள் எவரும் நாடுதிரும்ப மாட்டார்களென கருதப் படுகிறது.

# 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்

# சென். ஜோன்ஸா? சென்றலுக்கா வெற்றி?

யாழ். மத்திய கல்லூரிக்கும் சென் ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையில் நடைபெறவிருக்கும் 72 வது கிரிக்கெட் போட்டியையொட்டி கிரிக்கெட் பிரியர்களுக்கு உற்சாகமளிக்கும் புதிர் போட்டியொன்றை ஈழநாடு 'றுப்பி' அட்வட்டைசிஸ் ஆதரவுடன் நடத்துகிறது. புதிர்போட்டி இதோ!

இப்போட்டிசம்பந்தமான நிபந்தனைகள்:

O ஒருவர் எத்தனை கூப்பன்களையும் அனுப் லாம்.

O எல்லாம் சரியான விடைகளுடன் கூப்பன் கிடைக்காத பட்சத்தில் ஆகக்கூடிய சரியான விடையுடன் வரும் கூப்பனுக்கு முதல்பரிசு வழங்கப்படும். மற்றும் நான்கு பரிசுகளும் வழங்கப்படும்.

O கூப்பன்களை 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்', 'ஈழநாடு' த. பெ. இல: 49, யாழ்ப்பாணம் அல்லது 'ஈழநாடு கிரிக்கெட் புதிர்', 'றுப்பி அட்வட்டைஸஸ்', 18, வேம்படி ரோட், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

O புதிர் போட்டிக்கான மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதிமுடிவாகும்.

O கூப்பன்களுடன் வராத விடைகள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

O புதிருக்கான விடைகள் கிடைக்க வேண்டியகடைசிக் காலம்: 20-3-70 காலை 10 மணிக்குமுன்னர்.

O உங்கள் விடைகளை அழகாக தெளிவாக எழுத வேண்டும்.

### 'ஈழநாடு' கிரிக்கெட் புதிர்

பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

..............................

..............................

கையொப்பம்

### புதிருக்கான கேள்விகள்

1. இக்கிரிக்கெட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடுவதற்கான-கோஷ்டியைத் தெரிவு செய்வதற்கு பூவா, தலையா போட்டுப் பார்க்கும் போது யாருக்கு வெற்றி கிடைக்கும்?
2. இந்தக்கிரிக்கெட் போட்டியில் யாருக்கு இறுதிவெற்றி கிடைக்கும்?
3. யார் கூடுதலான ரன்களை எடுப்பார்கள்?
4. கூடுதலான விக்கெட்டுகளை 'பேஸ்மென்' களா 'ஸ்பின்னர்'களா எடுப்பார்கள்?
5. முதல் இன்னிங்ஸில் கூடுதலான ரன்களை யார் எடுப்பார்கள்?
6. யார் கூடுதலான விக்கெட்டுகளை வீழ்த்துவார்கள்?
7. சென் ஜோன்ஸ் காப்டனா, சென்றல் காப்டனா கூடுதலான ரன்களை எடுப்பர்?
8. முதலாவது இன்னிங்ஸில் எந்தக் கோஷ்டியினர் கூடுதலான ரன்களை எடுப்பார்கள்?

### பரிசுகள் வழங்குபவர்கள்

1-ம்பரிசு: ஏ.கே.எஸ். நகை மாளிகை வழங்கும் மணிக்கூடு.

2-ம்பரிசு: ஓட்டோஸ்லிமிட்டெட் வழங்கும் பெறுமதி வாய்ந்த பரிசு.

3-ம் பரிசு: அமிர்தாஸ் பிடவை மாளிகையினர் வழங்கும் மணிப்புரி சாறி அல்லது டெர்லின் ஷேர்ட்

4-ம் பரிசு: ஆர் பி கே. தயாரிப்புகளின் பிரதம விநியோகஸ்தர்களான பாலா டிஸ்றிபியூட்டர்ஸ் யாழ்ப்பாணம், வழங்கும் 2 போம் தலையணைகள்.

5-ம் பரிசு. மில்க்வைற் ஸ்தாபனம் வழங்கும்பரிசுப் பொட்டலம்.

## 'இளைஞர் இயக்க சேவை நோக்கம் தெரியவேண்டும்'

திருக்கோணமலை, புதன்

"இளைஞர்கள்தேசிய இளைஞர் இயக்கத்தில் சேருமுன்பாக இதன்பலன் என்ன நோக்கமென்ன என்பதை நன்றாகஉணரவேண்டும் என திருக்கோணமலையில் 300 பேர் கொண்ட தேசியஇளைஞர்இயக்கப்படையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் தேசிய இளைஞர் மன்றத் தலைவர் திரு. டி. எம். பீ.பி. தசநாயக கூறினார்.

திருமலை நகரில் 300 பேர் கொண்ட தேசிய இளைஞர் இயக்க ஆரம்பவிழா மக்கெய்சர் விளையாட்டரங்கில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

அவர் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது: '1948-ம் ஆண்டு நமக்கு கிடைத்த சுதந்திரம் போர் செய்யாமல், இரத்தம் சிந்தாமல் கிடைக்கப் பெற்றது இந்நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தும், உணவிலும், உடையிலும், குடியுரிமையிலும் நமக்கு சுதந்திரம் கிடைக்கவில்லை.

நாடுமுன்னேறவேண்டுமானால், விவசாயம், கைத்தொழில் போன்றவற்றில் முன்னேற்றம் காணவேண்டும்; அது இளைஞர்கள்ஆகிய உங்கள் கையில் தான் இருக்கின்றது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதியில் மார்ச் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org